

தரம் 5 - 11 வரை
எண்: 05 எழுத்து: 08
ஆகஸ்ட் 2011

# AHARAM அகரம்



## ஒட்டகச் சிவிங்கி

## உலகின் முதலாவது செய்திப் பத்திரிகை


Numb. 1.
PUBLICK
OCCURRENCES
Both FORREIGN and DOMESTICK.
Boston, Thursday Sept. 25th. 1690.



## ரமழான் ஒரு மாதப் பயிற்சிப் பாசறை

03 AUG 2011

30/-

மாணவர் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரமழானின் மாலைப் பொழுதுகளில்...

மக்ரிப் அதான் ஒலிக்க முன்பு துஆ மற்றும் இஸ்திஃபார்களில் ஈடுபடல்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"மூவருடைய துஆக்கள் மறுக்கப்பட மாட்டாது...

(அதிலொன்று) நோன்பாளி நோன்பு துறக்கும்போது கேட்கும் துஆ..." (அத்திர்மிதி)

இப்தார் நோன்பு துறக்கும் போது ஓதும் துஆ

ذَهَبَ الظَّمَأُ وَابْتَلَّتِ الْعُرُوقُ وَثَبَتَ الْأَجْرُ إِنْ شَاءَ اللهُ

தாகம் தீர்ந்தது; நரம்புகள் நனைந்தன. அல்லாஹ் நாடினால் கூலியும் கிடைத்துவிடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அகரம்

எண்: 05 ஆகஸ்ட் 2011 எழுத்து: 08



**பிரதம ஆசிரியர்**
ஏ.ரி.எம். நௌபல்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி,
தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**ஆசிரியர்**
எம்.ஏ.எல்.எம். பஸ்லுல் பாரிஸ் (நளீமி)


**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம்

**தளக் கோலம்**
எஸ்.எம். அனீஸ்


**சந்தா விபரம்**
1 வருட சந்தா 550 /-
6 மாத சந்தா 275 /-


**தொடர்புகளுக்கு:**
**அகரம்**
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324, 011 720 6575
பெக்ஸ்: 011 2686030
Email: *aharamipc@gmail.com*



## உள்ளே...



ஒட்டகச் சிவிங்கி 04


அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்பு 21


ENGLISH WITH Sister Rumman 15


ஞாபகமும் மறதியும்-02 30


ரமழான் ஒரு மாதப் பயிற்சிப் பாசறை 23


ஏமானைப் புடம்போடும் நோன்பு 08


உலகின் முதலாவது செய்திப் பத்திரிகை 28

இரசாயனவியலின் தந்தை ஜாபிர் இப்னு ஹய்யான் 36


### பாடத்திட்டம்


கணிதம் 34 | விஞ்ஞானம் 26
வரலாறு 18 | தமிழ் 32

புலமைப் பரிசில் 38


மாணவர் அகரம் 09


கவிதைச் சரம் 37





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான்; வாழ்க்கையின் அகல் விளக்கு

**ரமழான்** அருள் நிறைந்த மாதம்; மனித உள்ளங்களைப் பட்டை தீட்டும் ஆன்மிகப் பாசறை; தக்வாவின் விளைச்சல் நிலம்; மனிதகுல வாழ்வுக்கான வழிகாட்டி; அல்குர்ஆன் அருளப்பட்ட மாதம் என்பதால்தான் இத்தனை சிறப்பையும் ரமழான் பெறுகிறது.

அல்குர்ஆனை ஓத வேண்டும்; விளங்க வேண்டும்; அதன்படி நடக்க வேண்டும்; அதன்பால் அழைக்க வேண்டும்.

இந்த சிந்தனைகளோடு, நீண்டதாய் நாம் அனுபவிக்கும் ரமழான் விடுமுறையை பயனுள்ளதாகக் கழிக்க வேண்டும். ஓய்வு மிகப் பெரிய அருள், அது சோர்வைத் தரக் கூடாது. மாற்றமாக தொடர்ந்தேர்ச்சியான எமது செயற்பாட்டுக்கு ஊக்கமாக அதனை அமைத்துக் கொள்ள வேண்டும்.

அண்ணலாரின் வாழ்க்கை முழு வடிவமாய் அமைந்த வணக்கமாகும். அந்த வணக்கத்தின் கருவாக துஆ அமைந்திருக்கின்றது. ஒருவர் விழித்தது முதல் தூக்கத்திற்குச் செல்லும் வரையில் துஆக்கள் ஓத வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏராளம். அவை ஒவ்வொன்றும் எம்மை அல்லாஹ்வோடு நெருக்கமான உறவை ஏற்படுத்தி விடுகின்றன. அத்தகைய சந்தர்ப்ப துஆக்களை மனனமிடுவதற்குரிய அவகாசத்தை ரமழான் விடுமுறையில் அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும், அல்குர்ஆனின் சில ஸூராக்களை மனனமிடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அல்குர்ஆனின் சிறிய பகுதியேனும் இல்லாத உள்ளம் பாழடைந்த வீடு என்பதை நாம் அறிவோம். பொதுவாக முழுக் குர்ஆனையும் ஒருமுறையேனும் ரமழானில் ஓதுகின்ற பழக்கம் பலருக்குண்டு. அல்குர்ஆன் தர்ஜமாவை வாசித்து முடிப்பதற்கான முயற்சியை இந்த ரமழானில் மேற்கொள்ள வேண்டும்.

ரமழான் நீண்ட விடுமுறைக் காலமென்பதால் 35 அல்லது 40 நாட்களுக்குப் பின்னர்தான் நாம் பாடசாலை செல்லப் போகின்றோம். பாடங்களை மீட்டுவதற்கும் படிப்பதற்கும் நாம் ஓய்வளித்தல் ஆபத்தானதாகும். இது கற்றல் செயற்பாட்டில் சோம்பலை உருவாக்கி விடும். பாடப் புத்தகங்களைப் படிப்பதற்கும் பாடங்களை மீட்டுவதற்கும் ஒரு நாளில் ஒன்று அல்லது இரண்டு மணிநேரங்களையேனும் ஒதுக்கிக் கொள்வது அவசியமாகும்.

பாடசாலை நாட்களில் எங்களது அனைத்துக் கருமங்களையும் பெற்றோர்களே எமக்கு செய்து தருகிறார்கள். எம்மில் மிக அரிதானவர்களே வீட்டு வேலைகளில் பங்கெடுக்கிறார்கள் என்பதுதான் நடைமுறை யதார்த்தமாகும். ரமழான் எமது இந்த நடைமுறையில் மாற்றத்தை ஏற்படுத்த வழி செய்ய வேண்டும். வீட்டு வேலைகளில் பங்கெடுத்து தாய்க்கும் தந்தைக்கும் உதவி ஒத்தாசை புரிகின்ற நடைமுறை உருவாக வேண்டும். பெற்றோருக்கு உதவி உபகாரம் புரிவதில் அல்லாஹ்வின் அருள் இருக்கிறது. நமது வேலைகளை நாமே செய்து கொள்வதற்கு அது பயிற்சி அளிக்கின்றது. பெற்றோரின் பிரார்த்தனையைப் பெற அது காரணமாக அமைந்து விடுகின்றது.

இப்படியாக, ரமழான் எம்மில் தாக்கம் செலுத்த வேண்டும். எம்மில் மாற்றங்களை உண்டுபண்ண வேண்டும். பசியை, தாகத்தை, மனோ இச்சையை கட்டுப்படுத்துவதற்கான பயிற்சியைத் தரவேண்டும். அல்குர்ஆனின் சிந்தனைகளோடு எம்மை ரமழான் பிணைத்திட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருமையான ஆலோசனைகளை அங்கீகரித்த அண்ணலார்

**பத்ர்** யுத்தம் ரமழான் மாதத்தில் நிகழ்ந்தது என்பதை நாமறிவோம். அக்காலத்தில் போர் ஆரம்பிக்க முன்னர், தமக்குப் பாதுகாப்பான பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து கூடாரமடித்து தங்குவது வழக்கம். இவ்வாறு இடத்தைத் தெரிவு செய்வது கூட யுத்த வியூகங்களின் அடிப்படையிலேயே நிகழும்.

இவ்வாறான யுத்த வியூகத்தின் அடிப்படையில் பத்ர் களம் நோக்கி முஸ்லிம்களின் படை முன்னேறுகிறது. குறைஷிகள் அவ்வாறான உரிய, உகந்த, பாதுகாப்பான இடங்களைத் தேடி கூடாரமடிக்கும் முன்னர், அவ்விடங்களில் கூடாரமடிக்க விரைகின்றனர் அண்ணலாரும் அவர்களது அருமைத் தோழர்களும்.

நபியவர்களின் திட்டம் பத்ர் நீர்நிலைகளுக்கு அருகில் கூடாரமடிப்பதாகும். திட்டமிட்டபடி, அல்லாஹ்வின் அருளால் அன்று இஷா நேரத்திற்கு முன் அவ்விடத்தை அடைகின்றனர்.

பாலைவனத்தைப் பொறுத்தவரை நீர் மிக முக்கியமானதும் அதேவேளை தட்டுப்பாடானதுமாகும். வந்தவர்கள் அங்குள்ள நீர் நிலையொன்றின் அருகில் இறங்கியதும் போர்க்கலை விடயங்களில் நிபுணத்துவம் பெற்றவரும் யுத்த வியூகங்களை நன்கறிந்த ஸஹாபியுமான அல்ஹுபாப் இப்னு முன்திர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் கேட்டார்கள்;

"யா ரஸூலல்லாஹ்! இந்த இடத்தில் நீங்கள் தங்க விரும்புவது உங்களது கருத்தா? அல்லது அல்லாஹ்வின் கட்டளையா?"

"இல்லை, இது எனது அபிப்பிராயம். அல்லாஹ்வின் கட்டளையல்ல" என நபியவர்கள் கூறினார்கள்.


"யா ரஸூலல்லாஹ்! நான் நினைக்கிறேன், இதனைவிட தங்குவதற்குப் பொருத்தமான இடமாக குறைஷிகளுக்கு அருகாமையிலுள்ள நீர்நிலைகள் இருக்கும். நாம் அங்கு சென்று தங்குவதுதான் மிகப் பொருத்தமாக அமையும். நாம் அங்கு சென்று நீர் உள்ள சிறிய இடங்களை அழித்துவிட்டு, ஒரேயொரு நீர்த் தடாகத்தை மாத்திரம் வைப்போம். நாளை போர் நடக்கும்போது எமக்கு அருந்துவதற்கு நீர் இருக்கும். குறைஷிகளுக்கு அந்த வசதி இருக்காது" என்றார் அல்ஹுபாப் இப்னு முன்திர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள்.

"அருமையான யோசனை. அப்படியே செய்வோம்" என்றார்கள் அண்ணலார்.

பார்த்தீர்களா, இப்படித்தான் நபியவர்கள் மற்றவர்களின் கருத்துகளுக்கு மதிப்பளித்தார்கள். மற்றவர்களின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். கருத்துச் சுதந்திரத்தையும் அருமையான ஆலோசனை வழங்கும் முறையையும் பின்பற்றினார்கள். அதேபோல் ஸஹாபிகளும் தங்களது கருத்துக்களை பணிவாக, பண்பாகக் கூறினார்கள். தமது கருத்து ஏற்றுக் கொள்ளப்படுமா என்று கொஞ்சம் கூடத் தயங்கவில்லை. நம்பிக்கையோடு தமது கருத்துக்களைக் கூறினார்கள். இப்படியான ஆரோக்கியமான கருத்துப் பரிமாற்றங்களுக்கு நாமும் எம்மைப் பயிற்றுவித்துக் கொள்வோமாக!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லலமுல்ல ஆலிப் அலி
www.aliaalif.tk



# ஒட்டகச் சிவிங்கி

**விலங்குகளிலேயே** மிகவும் உயரமான உயிரினம் இந்த ஒட்டகச் சிவிங்கிதான். இதனை ஆங்கிலத்தில் 'Giraffe' என அழைப்பர். இவ்வுயிரினத்தில் அல்லாஹ் பல்வேறு அத்தாட்சிகளை எமக்குக் காண்பிக்கிறான்.

ஒட்டகச் சிவிங்கியின் உடற்தோற்றம் பார்ப்பதற்கு மிகவும் அழகானது. நீளமான கால்கள், நீண்ட கழுத்து, குட்டையான வால், தலையில் இரண்டு சிறிய கொம்புகள், இயல்பிலேயே காணப்படுகின்ற சாந்தமான தன்மை அத்தோடு அவற்றின் தோலில் காணப்படுகின்ற வெள்ளை நிறக் கோடுகளும் பழுப்பு நிறப் பெட்டி பெட்டியான வடிவங்களும் ஒட்டகச் சிவிங்கிகளுக்குத் தனியானதொரு தோற்றத்தை வழங்குகின்றன.



இவற்றின் கால்களும் கழுத்தும் பாலைவன ஒட்டகைகளினது கால்களையும் கழுத்தையும் போன்று நீண்டு உயரமாக இருப்பதனால்தான் தமிழில் இவற்றுக்கு 'ஒட்டகச் சிவிங்கி' எனப் பெயர் வழங்கப்படுகிறது.

இந்த ஒட்டகச் சிவிங்கிகள் ஆபிரிக்க கண்டத்தில் உள்ள சவன்னா (Savanna) என்ற காடுகளிலேயே அதிகமாக வாழ்கின்றன. அதுவல்லாமல் மிகக் குறைந்த அளவில் வேறு சில நாடுகளிலும் வாழ்கின்றன. இவ்விலங்குகளின் உயிர் வாழ்க்கைக்குப் போதுமான தட்ப வெப்பமும் இவை விரும்பி உண்ணும் அகாஸியா (Acasia) எனும் உயரமான மரங்களும் சமனான தரைத் தோற்றமும் ஆபிரிக்காவில் காணப்படுவதால் தான் அங்கு ஒட்டகச் சிவிங்கிகள் அதிகமாக உள்ளன.

ஆண் ஒட்டகச் சிவிங்கிகளை விடவும் பெண் ஒட்டகச் சிவிங்கிகள் உயரத்திலும் நிறையிலும் குறைவானவையாகும். பொதுவாக ஆண் ஒட்டகச் சிவிங்கி 19 அடி உயரத்தையும் 2,400 முதல் 3,000 இறாத்தல் (Pounds) வரையிலான நிறையையும் கொண்டிருக்கும். ஆனால் பெண் ஒட்டகச் சிவிங்கி 16 அடி உயரத்தையும் 1,600 முதல் 2,600 இறாத்தல் (Pounds) வரையிலான நிறையையும் கொண்டிருக்கும்.



இவை உயரமான மரங்களில் உள்ள இலை குழைகளையும் மிகவும் சுலபமாகப் பற்றி சாப்பிட்டு விடுகின்றன. இதற்கு அவற்றின் உயரமான கால்களும் நீண்ட கழுத்தும் நீளமான நாக்கும் தான் உதவி செய்கின்றன. தரையில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுகளை உட்கொள்ள இவை சற்று சிரமப் பட வேண்டியுள்ளது. அதனால் கூடுதலாக உயர மான மரங்களில் உள்ள இலை குழைகளையே உண்கின்றன.

இங்கு அல்லாஹ்வின் படைப்பாற்றலின் ஒரு நுணுக்கத்தை எம்மால் அவதானிக்க முடியும். அகாஸியா மரங்கள் ஆபிரிக்கப் பகுதிகளில்தான் கூடுதலாக வளர்கின்றன. ஆபிரிக்காவின் தட்ப வெப்பம்தான் குறித்த தாவரம் சிறப்பாக வளர உதவுகிறது.

அகாஸியா உயரமாக வளரக்கூடிய ஒரு தாவர மும்கூட. ஒட்டகச் சிவிங்கிகளது விருப்பமான உணவும் இந்த அகாஸியாதான். ஒட்டகச் சிவிங்கிகள் உயரமான விலங்குகள் என்பதால் உயரமாக உள்ள தாவரங்கள் மீதே நாட்டம் கொள்கின்றன. ஆக அகாஸியா தாவரங்களின் வளர்ச்சிக்கு ஆபிரிக்காவின் கால நிலை காரண மாக உள்ளது. ஒட்டகச் சிவிங்கிகளின் வாழ்க் கைக்கு அகாஸியா தாவரங்களும் ஆபிரிக்காவின் கால நிலையும் சாதகமாயுள்ளன. ஆபிரிக்காவின் வெப்பத்தைத் தாங்கும் விதத்தில் அவற்றின் தோலும் சற்றுக் கடினமானதாக அமையப் பெற்றுள்ளது. ஒவ்வொன்றும் மற்றொன்றில் தங்கி மற்றொன்றின் ஆதரவோடு சரியாகப் பொருந்தி இருக்கும் விதத்தில் அமையப் பெற்றுள்ளன.

*"அல்லாஹ் எவ்வாறு அமைத்துள்ளான் என்று பார்த்தீர்களா? அல்லாஹ் யாவற்றையும் நன்கறிந்தவன். தீர்க்கமான அறிவுடையவன்."*
*(33:40)*

ஒட்டகச் சிவிங்கிகள் எப்படி தரையில் உள்ள உணவை உட்கொள்ள சிரமப்படுகின்றனவோ அதேபோன்று அவை நீர் அருந்தும்போதும் கூட சிரமப்படுவதுபோல் எமக்குத் தோன்றும். ஆனால், ஒட்டகச் சிவிங்கிகளைப் பொறுத்த வரையில் அது மிகவும் சுலபமான ஒரு விட யம். அவை நீர் குடிக்கும் காட்சி மிக விசித்திரமாக இருக்கும். ஆற்றோரத் திலோ அல்லது குளக்கரையிலோ ஒட்ட கச் சிவிங்கிகள் வந்து வரிசையாக நின்று கொள்ளும். பின்னர் தமது முன், பின் கால் களை இருபுறமாக அகல விரித்து கழுத்தை முன்னே நீட்டி நீர் பருக ஆரம்பிக்கும். ஒரே தடவையில் இவை பெருமளவு நீரைப் பருகி விடுகின்றன.



இவை பகற்பொழுதுகளில் ஓய்வெடுப்பதற் காக நிலத்தில் சாய்வதில்லை. மாறாக நின்று கொண்டேதான் இளைப்பாறுகின்றன. ஏனெனில் கீழே அமர்ந்திருக்கும்போது ஏதும் ஆபத்துக்கள் ஏற்பட்டால் விரைவாக எழுந்துகொள்ள அவற் றால் முடியாது. சற்று தாமதித்தே எழுந்து நிற்க முடிகிறது. எனவேதான் நின்ற நிலையில் அவை இளைப்பாறுகின்றன. ஆனாலும் இரவு நேரங்க ளில் தரையில் சாய்ந்து தூங்கும் வழக்கத்தைக் கொண்டுள்ள ஒட்டகச் சிவிங்கிகள் அதுவும் ஒரு இரவில் சுமார் 4 மணிநேரங்கள் மாத்திரமே நித்திரை செய்கின்றன.

வேட்டை மிருகங்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அல்லாஹ் இவற் றுக்குச் சிறப்பானதொரு பாதுகாப்பு ஆயுதத்தை யும் கொடுத்துள்ளான். அதுதான் பலமான நீண்ட அவற்றின் கால்களாகும். ஒட்டகச் சிவிங்கிகள் மிக உயரமாக இருப்பதாலும் கழுத்து உயரே நீண்டிருப்பதாலும் கூர்மையான கண்களாலும் செவிப்புலன்களாலும் தூரத்தில் வைத்தே எதிரி களின் நடமாட்டத்தை விரைவில் இவற்றால் இனங்கண்டுகொள்ள முடியும். எனவே எதிரி விலங்கு தம்மை நெருங்கும் முன்பே நீண்ட கால் கள் உள்ளதால் மிகவேகமாகத் தப்பியோடவும் முடியும். அல்லது எதிரி விலங்கு அருகே நெருங் கினால் கூட அவற்றின் கால்களால் ஓர் உதை விட்டாலே போதும் அவற்றின் தலை நொறுங் கிவிடும். அவ்வளவு பலம் ஒட்டகச் சிவிங்கிக ளின் கால்களில் காணப்படுகிறது. இதனால்தான் ஒட்டகச்சிவிங்கிகளுக்கு எதிரிகளும் மிகக் குறைவு. எனினும் மிக அரிதாக சிறிய ஒட்டகச் சிவிங்கி கள் சிங்கம் அல்லது புலிக்கு இரையாவதுண்டு.

அல்லாஹ் ஒட்டகச் சிவிங்கிகளுக்குப் சக்தி மிக்க இதயத்தைக் கொடுத்துள்ளான். உயரமான இடத்தில் பொருத்தப்பட்டுள்ள நீர் தாங்கிக்கு கிணற்றிலிருந்து நீரைச் செலுத்தவேண்டு மானால் சக்திவாய்ந்த ஒரு தண்ணீர் பம்பி பொருத்தப்பட வேண்டும். அதே போன்றுதான் மிக உயரத்தில் உள்ள ஒட் டகச் சிவிங்கியின் மூளைக்கும் கீழே உள்ள கால்களுக்கும் இதர உறுப்புகளுக்கும் இரத் தத்தைப் பம்பியடிக்க இதயம் திடமாகவும் வேகமாகவும் தொழிற்படக்கூடியதாக இருக்க வேண்டும். அவ்வாறுதான் ஒட்டகச் சிவிங்கி களின் இதயத்தை அல்லாஹ் சக்திமிக்கதாகப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைத்துள்ளான்.

ஒட்டகச் சிவிங்கிகள் எப்போதும் கூட்டமாகத் தான் வாழ்கின்றன. அத்தோடு அவை ஓரிடத்தில் தங்கி வாழ்வதுமில்லை. தமது தலைமையைப் பின்தொடர்ந்து எப்போதும் பிரயாணித்துக் கொண்டே இருக்கும். பிரயாணத்தின்போது நீர ருந்தும் வாய்ப்புகள் கிடைக்காவிட்டாலும் கூட நீண்ட நாட்களுக்கு நீர் அருந்தாமல் பயணிக்கும். ஒட்டகச் சிவிங்கிகளால் ஒலியெழுப்ப முடியாது. ஆனால் ஏதோவொரு விதத்தில் அவை தமக்கி டையே உறவாடிக் கொள்கின்றன.

ஆபிரிக்கா வெப்ப வலய பிரதேசம் என்பதால் அங்குள்ள தாவரங்களையும் அதற்கு ஈடுகொடுக் கும் வகையில் கடினமாகவும் முட்கள் நிறைந்த தாகவுமே அல்லாஹ் படைத்துள்ளான். இத்தாவ ரங்களைக்கூட மிக எளிதாக உண்ணக்கூடிய விதத் தில் அல்லாஹ் ஒட்டகச் சிவிங்கிகளின் உடலு றுப்புக்களைப் படைத்துள்ளான். பாருங்கள் அல்லாஹ் ஒவ்வொன்றையும் எவ்வளவு நுணுக்க மாகப் படைத்துள்ளான் என்று இலை குழைகளை சுருட்டி எடுத்து வாயினுள் செலுத்த இலகுவாக அல்லாஹ் அவற்றின் நாக்குகளை நீளமாகவும் கடினமானதாகவும் அமைத்துள்ளான். இவற்றின் நாக்கு 18 அங்குலம் நீளமானது. அத்தோடு ஒட்டகச் சிவிங்கிகளின் இரைப்பைகூட எந்த உணவையும் அரைத்து சமிபாடடையச் செய்யும் விதத்தில் அமையப் பெற்றுள்ளது.

பொதுவாக கொம்புள்ள பிற விலங்குகள் அனைத்துக்குமே அவை பிறந்து சிறிது காலத்தில் தான் கொம்பு முளைக்கிறது. ஆனால் ஒட்டகச் சிவிங்கிகளின் அற்புதம் அவை தாயின் வயிற்றி லிருந்து பிறக்கும்போதே கொம்புடன்தான் பிறக் கின்றன. பிறக்கும்வரை மென்மையாக இருக்கும் கொம்புகள் பிறந்து சில நாட்களில் கடினத்தன்மை பெறுகின்றன. இக்கொம்புகள் 5 அங்குலம் வரை வளர்கின்றன. அடுத்தது பிற விலங்கு களில் ஆண் விலங்குக்கு மட்டுமே கொம்பு காணப்படும். ஆனால் இங்கு ஆண், பெண் இரண்டுக்குமே அவற்றின் தலையில் இரண்டு கொம்புகள் காணப் படுகின்றன. இரண்டு ஆண் ஒட்டகச் சிவிங்கிகள் சண்டையிட்டுக்கொள்ளும் போது ஒவ்வொன்றும் தம்மைத் தற்காத்துக் கொள்ளவும் மற்றையதைத் தாக்கவுமே இதனை பயன்படுத்துகின்றன.




ஒட்டகச் சிவிங்கிகள் ஐந்து வயது முதலே இனப்பெருக்கத்திற்குத் தயாராகி விடுகின்றன. ஒரு குட்டி ஒட்டகச் சிவிங்கி 15 மாதங்கள் தாயின் வயிற்றில் வளர்ந்து இப்பூவுலகைத் தரிசிக்கிறது. குட்டி ஒட்டகச் சிவிங்கி பிறக்கும்போது 6 அடி உயரத்தில் இருக்கும். பிறந்து சில மணிநேரங்களி லேயே குட்டி ஒட்டகச் சிவிங்கி எழுந்து தள்ளா டித் தள்ளாடி நடக்கவும் தாயின் பால் மடியைத் தேடிச் சென்று பாலருந்தவும் துள்ளிக் குதிக்கவும் ஆரம்பிக்கிறது. முதல் வாரத்தில் தாய் ஒட்டகச் சிவிங்கி குட்டிக்கு சிறந்த பாதுகாப்பை வழங்கு கிறது. அதன் பின்னர் குட்டி படிப்படியாக சுய மாக உணவு உண்ணவும் தனித்து இயங்கவும் பழகிக்கொள்கிறது. ஒரு பெண் ஒட்டகச் சிவிங்கி அதன் முழு வாழ்நாளிலும் 12 குட்டிகளை மாத் திரமே ஈனுகின்றது. வருடத்திற்கு ஒரு குட்டிதான் இட முடியும். ஆரோக்கியமான ஒட்டகச் சிவிங்கி 25 வருடங்கள் வரை உயிர் வாழும்.

டார்வினின் பரிணாமவாதக் கோட்பாட்டின் படி ஆரம்பத்தில் ஒட்டகச் சிவிங்கிகளும் தற் போதிருக்கின்ற ஆடு, மான் போன்றுதான் இருந் தனவாம். ஆனால் படிப்படியாக தரையிலும் தமது உயரத்திற்கும் இருந்த தாவரங்கள் தீர்ந்து போகவே ஒட்டகச் சிவிங்கிகள் அதற்கு மேலால் உள்ள உணவைப் பெறுவதற்காக எட்டி எட்டி காலப்போக்கில் அவற்றின் கழுத்து நீண்டு கால்கள் நீண்டு உயர்ந்துவிட்டனவாம். உண்மையில் இது எவ்வளவு பெரிய பொய் முட்டாள்தனம் என்று பாருங்கள். அப்படியானால் இன்று ஆடு, மாடு, மான், மரைகள்கூட ஒட்டகச் சிவிங்கி போன்று தான் உயர்ந்து நீண்டிருக்க வேண்டும்.

ஆரம்பத்தில் அல்லாஹ் எவ்வாறு இதனைப் படைத்தானோ அதேபோன்றுதான் இன்று வரைக்கும் இவ்வுயிரினங்கள் காணப்படுகின்றன.

"அவன் (தான்) அல்லாஹ்; படைப்பாளன்; (அவனே படைப்பினங்களை ஒழுங்கு படுத்தி) உண்டாக்குகின்றான். (அவனே படைப்பினங்களின்) உருவத்தை அமைக்கின்றான். அவனுக்கு அழகான பெயர்களிருக்கின்றன. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை (அனைத்தும்) அவனையே துதி செய்கின்றன. அவனே யாவரையும் மிகைத்தோன். தீர்க்கமான அறிவுடையோன்."

**(59:24)**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்சாரிகளின் உறுதியும் நபியவர்களின் நற்செய்தியும்

**நபியவர்கள்** பத்ர் நோக்கிச் செல்லும்போது ஷூரா- ஆலோசனை சபையைக் கூடுமாறு பணிக்கிறார்கள். கருத்துக் கேட்டபோது முதலில் முஹாஜிர்களில் 3 தளபதிகள் தமது கருத்துக்களைக் கூறினர்.

முஹாஜிர்கள் படையில் மிகக் குறைவானவர்களாக இருந்ததால், நபியவர்கள் அன்சாரி தளபதிகளின் கருத்துக்களை அறிய விரும்பினார்கள். ஏனெனில், அன்சாரிகள்தான் அதிகமாக இருந்தனர். மேலும், போரினால் ஏற்படக்கூடிய விளைவுகளும் அன்சாரிகளையே அதிகம் பாதிக்கக் கூடியதாக இருக்கும். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அகபாவில் செய்து கொண்ட உடன்படிக்கையில் அன்சாரிகள் மதீனாவிற்கு வெளியில் சென்று போர் புரிய வேண்டுமென்ற நிபந்தனை இல்லாமலிருந்தது. ஆகவேதான் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அன்சாரிகளின் கருத்துகளைக் கேட்க விரும்பினார்கள்.

மூன்று தளபதிகளின் பேச்சைக் கேட்டதற்குப் பின்பு அன்சாரிகளை மனதில் கொண்டு, "மக்களே! எனக்கு ஆலோசனை கூறுங்கள்" என்று பொதுவாகக் கூறினார்கள். நபியவர்களின் நோக்கத்தை விளங்கிக் கொண்ட அன்சாரிகளின் தளபதியாக இருந்த ஸஅத் இப்னு முஆத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபியவர்களிடம், "அல்லாஹ்வின் மீது சத்தியமாக! அல்லாஹ்வின் தூதரே! எங்களிடம் கேட்பது போல் தெரிகிறதே" என்றார்.

"ஆம்" என்று நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூற, ஸஅத் இப்னு முஆத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் எழுந்து பதிலளித்தார்கள்:

"நாங்கள் உங்களை விசுவாசித்தோம்; உங்களை உண்மையானவர்கள் என நம்பினோம். நீங்கள் கொண்டு வந்ததுதான் சத்தியமென்று சாட்சி கூறினோம். இதை ஏற்று உங்களின் கட்டளைகளைச் செவிமடுத்தோம். அதற்குக் கட்டுப்படுவோம் என்று உடன்படிக்கையும் ஒப்பந்தமும் செய்து கொடுத்தோம். எனவே, நீங்கள் விரும்பிய வழியில் செல்லுங்கள். உங்களை சத்தியத்தைக் கொண்டு அனுப்பிய இறைவன் மீதாணையாக! நீங்கள் எங்களை அழைத்துக் கொண்டு கடலுக்குள் மூழ்கினால் நாங்களும் மூழ்குவோம். எங்களிலிருந்து ஒருவரும் பின்தங்கிவிட மாட்டார்கள். நாளை எங்களுடன் எதிரிகளை நீங்கள் சந்திப்பதை நாங்கள் வெறுக்கவில்லை. நிச்சயமாக போரில் நாங்கள் உறுதியுடன் இருப்போம். எதிரிகளைச் சந்திப்பதில் உண்மையாளர்களாக இருப்போம். உங்களுக்குக் கண்குளிர்ச்சி தருபவற்றை அல்லாஹ் எங்கள் மூலம் வழங்கலாம். அல்லாஹ்வுடைய அருளுடன் எங்களை அழைத்துச் செல்லுங்கள்."

ஸஅத் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் பேச்சையும் அவரது உற்சாகத்தையும் கண்ட நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மிகுந்த ஆனந்தமடைந்தார்கள்.

நபியவர்கள் கூறினார்கள்: "நற்செய்தி அடைந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அல்லாஹ் இரண்டு கூட்டங்களில் ஒன்றை எனக்கு வாக்களித்துள்ளான். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அக்கூட்டத்தினர் வெட்டுண்டு விழும் இடங்களை நான் இப்போது பார்ப்பதைப் போன்று இருக்கின்றது." ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹதீஸ் பூங்காவிலிருந்து

• ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

## ஈமானைப் புடம்போடும் நோன்பு

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: قَالَ رَسُوْلُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:
مَنْ صَامَ رَمَضَانَ إِيْمَانًا وَاحْتِسَابًا غُفِرَ لَهُ مَا تَقَدَّمَ مِنْ ذَنْبِهِ (مُتَّفَقٌ عَلَيْهِ)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள்; "யார் ஈமானுடனும் நன்மையை எதிர்பார்த்தும் ரமழான் மாதத்தில் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முன்னைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விடும்." (அல்புகாரி, முஸ்லிம்)

**அல்லாஹ்வின்** அடிமையாக இவ்வுலகில் படைக்கப்பட்டுள்ள நாம் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ளத்தாலும் செயலாலும் அவனுக்கு அடிபணிந்து வாழ வேண்டும் என்பதை அல்குர்ஆன் எமக்குப் போதிக்கிறது.

"நான் ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே அன்றி (வேறு எதற்காகவும்) படைக்கவில்லை." *(51:56)*

இந்த வகையில் அல்லாஹ் தன் அடியான் மீது தொழுகை, ஸகாத், ஹஜ் போன்ற இபாதத்துக்களை கடமையாக்கியுள்ளதைப் போலவே ரமழான் மாத நோன்பையும் விதியாக்கியுள்ளான். நோன்பு எம்மீது கடமையாக்கப்பட்டதன் நோக்கத்தை அல்குர்ஆன் இவ்வாறு கூறுகிறது;

"இறைவிசுவாசிகளே! உங்களுக்கு முன்பிருந்தவர்கள் மீது நோன்பு விதியாக்கப்பட்டது போன்று உங்கள் மீதும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது. (அதன் மூலம்) நீங்கள் இறைச்சமுள்ளவர்களாகத் திகழலாம்." *(2: 183)*

பொதுவாக தொழுகை, ஸகாத், ஹஜ் போன்ற இபாதத்துக்கள் அனைத்தும் பிறர் காணக்கூடியவாறு வெளிப்படையான செயற்பாடுகளோடு இணைந்து காணப்படுகின்றன. ஆனால் நோன்பு மாத்திரம் நோன்பாளிக்கும் அல்லாஹ்வுக்கும் மாத்திரமே அறிய முடியுமான விதத்தில் மனோ இச்சையிலிருந்து தவிர்ந்திருப்பதாக அமைகிறது.

ஒரு மனிதன் நோன்பு நோற்கின்றபோது தனது உள்ளத்தையும் உள்ளத்தில் எழும் ஆசைகளையும் அல்லாஹ்வுக்காக என்ற தூய நோக்கிலும் நன்மையை எதிர்பார்த்தவனாகவும் கட்டுப்படுத்திக் கொள்கிறான். நோன்பை முறித்து விடக்கூடிய எக்காரியத்தையும் எச்சந்தர்ப்பத்திலும் அவன் செய்ய முனைய மாட்டான். மேலும் கெட்ட வார்த்தைகள் பேசுவதிலிருந்தும் பிறருடன் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவதிலிருந்தும் ஒதுங்கி நடக்கிறான். எனவேதான் நோன்பு ஒரு மனிதனுடைய ஈமானை பட்டை தீட்டி அவனது பாவக்கறைகளைப் போக்கி அவனை அல்லாஹ்வின் அன்பிற்குரிய முஃமினாக மாற்றிவிடுகிறது. இதனையே இந்த ஹதீஸ் எமக்குத் தெளிவுபடுத்துகிறது.

ஒருவன் ஸஹர் செய்து நோன்பு நோற்றவன் போல் தன்னைக் காட்டிக்கொண்டு யார் கண்ணிலும் படாமல் சாப்பிடலாம். ஆனால் தன்னை அல்லாஹ் அவதானித்துக் கொண்டிருக்கிறான் என்ற தக்வா (இறையச்சம்) காரணமாக ஒரு நோன்பாளி நோன்பு நோற்றிருக்கும்போது தூய்மையான முறையில் அல்லாஹ்வை அஞ்சி அவற்றிலிருந்து தவிர்ந்து கொள்கிறான். இத்தகைய ஒரு நிலையைத்தான் நோன்பு எம்மிடம் எதிர்பார்க்கிறது.

அல்லாஹ்விடத்தில் நன்மையை எதிர்பார்த்தும் தூய்மையான ஈமானுடனும் நோன்பு நோற்பவனுடைய பாவக்கறைகளை அல்லாஹ் அழித்துவிடுவதாகக் கூறுகிறான். அத்தோடு மறுமையில் அவனுக்கு ரய்யான் எனும் வாயிலினூடாக சுவனம் செல்லும் வாய்ப்பையும் நல்குகிறான்.

நன்மைகள் பன்மடங்காக அள்ளி வழங்கப்படுகின்ற இம்மாதத்தில் மாணவர்களாகிய நாங்கள் நல்லமல்களை அதிகமதிகம் நிறைவேற்றி நன்மைகளை கொள்ளையடிப்பதில் அக்கறை கொள்வோம். அல்குர்ஆனை அதிகம் திலாவத் செய்வதோடு அதன் பகுதிகளை மனனமிடுவதற்கும் முயற்சி செய்வோம். மற்றவர்களுக்கு தானதர்மங்களை எம்மால் முடிந்தவரை அள்ளி வழங்குவோம். எச்சந்தர்ப்பத்திலும் பொறுமையோடு இருந்து அல்லாஹ்வின் தூய அடியார்களாக வாழ முயற்சிப்போம். இவ்வாறான நற்செயல்கள் எம் ஈமானை உறுதிப்படுத்தி ரய்யானூடாக சுவனம் செல்ல எமக்கு வழிவகுக்கும், இன்ஷா அல்லாஹ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## பெரியோரின் வரிகளில் அறிவின் சிறப்பு

முஆத் இப்னு ஜபல் (ரழியல்லாஹு அன்ஹு): அறிவைக் கற்றுக் கொள்ளுங்கள். இதனை அல்லாஹ்வுக்காகக் கற்பது இறை யச்சம்; அதனைத் தேடுவது இபாதத்; அதனை மீட்டுவது தஸ்பீஹ்; அறியாதவர்களுக்கு அதனைக் கற்பிப்பது ஸதகா. அதனைப் பற்றி ஆராய்வது ஜிஹாத்.

இமாம் ஷாபிஈ (ரஹிமஹுல்லாஹ்): அறிவை விரும்பாதவனை நீ நண்பனாக் காதே! தீமையிலிருந்து விலகிக் கொள்வதும் பொறுமையும் கல்விக்கு அழகைக் கொடுப் பதாகும்.

பாத்திமா நுஸ்லா
தரம்-09, நிக/ அபுக்காகம மு.ம.வி.

## பொது அறிவு

பைத்துல் மக்திஸ் பள்ளிவாசலுக்கு அத்திபாரமிட்டவர் - தாவூத் நபி

அல்லாஹ்வின் பண்புகள் பற்றி காபிர்கள் கேட்டபோது இறங்கிய ஸூரா - ஸூரதுல் இஹ்லாஸ்

ஒரே தடவையில் இறக்கப்பட்ட மிக நீண்ட ஸூரா - ஸூரத்துல் அன்ஆம்

தபால் திணைக்களத்தை உருவாக்கிய கலீபா - உமர் (ரழியல்லாஹு அன்ஹு)

மதீனாவில் முதன் முதலில் நபி (ஸல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தங்கிய வீடு - அபூ அய்யூப் அல்அன்சாரி அவர்களுடையது

ஸூரா பகராவிலுள்ள ஆயத்துக்கள் - 286

எம்.எச்.எப்.இபாதா
மெத்தைப் பள்ளி வீதி, காத்தான்குடி-04

## தெரியாததை தெரிந்து கொள்ளுங்கள்

லியனாடோ டாவின்சி வரைந்த மொனாலிசா ஓவியம் தற்போது எங்குள்ளது?
**லூவர் தொல்பொருள் நிலையம், பிரான்ஸ்**

மைக்கல் அஞ்சலோவைப் போன்று டேவிட் சிலையை உருவாக்கிய மற்றைய சிற்பி யார்?
**டொனெடெலோ**

மானுடவியலின் தந்தை என அழைக்கப்பட்டவர் யார்?
**பிரான்சிஸ் பெட்ராக்**

ஆங்கில இலக்கிய எழுச்சியின் தாரகை என வரணிக்கப்படுபவர் யார்?
**பிரான்சிஸ் பேகன்**

அச்சியந்திரத்தை கண்டுபிடித்தவர் ?
**ஜொஹன்னஸ் கூட்டன் பேர்க்**

கிழக்கு உரோம பேரரசின் தலைநகர் எது ?
**கொன்ஸ்தாந்திநோபிள்**

"நாங்கள் வாசனைத் திரவியங்களையும் கிறிஸ்தவர்களையும் தேடி வந்தவர்கள்" என்று கூறிய கடலோடி யார் ?
**வாஸ்கொட காமா**

ஐரோப்பியர் வருகையின்போது அமெரிக்காவில் வாழ்ந்த ஆதிக் குடியினர் யார் ?
**செவ்விந்தியர்**

பிரெஞ்சுப் புரட்சியின் போது "பாண் இல்லையால் கேக் சாப்பிடுங்கள்" என்று கூறிய மன்னன் யார்?
**16ம் லூயி**

எம்.என். எப். முஸ்பிரா
தரம்-09, நிக/ நம்முவாவ மு.ம.வி.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"நோன்பாளிக்கு இரண்டு வகையான மகிழ்ச்சிகள் உள்ளன. முதலாவது நோன்பு துறக்கும்போது நோன்பாளிக்கு ஏற்படும் மகிழ்ச்சி. இரண்டாவது, தனது நோன்பின் காரணமாக தன் இரட்சகனைச் சந்திக்கும்போது ஏற்படும் மகிழ்ச்சி."
(அல்புகாரி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைமறையே நீ!

குர்ஆன்: மனிதா! ஏன் புலம்பிக் கொண்டிருக்கிறாய்?

மனிதன்: மறையே! என் இதயம் நிம்மதியின்றி வேதனைப் படுகிறது. எனக்கு நிம்மதி அளிப்பாயா? எனக்கு கவலையாக இருக்கிறது; ஆறுதல் சொல்வாயா? நிறையவே பிரச்சினைக்கு தீர்வு சொல்வாயா? என் வாழ்வில் வறுமையுள்ளது; உணவளிப்பாயா?

குர்ஆன்: மனிதா! முதலில் உனக்கு நான் யார் என்று தெரியுமா?

மனிதன்: இல்லை, நிச்சயமாகத் தெரியாது.

குர்ஆன்: நீ என்னைப் பற்றி அறிந்திருந்தால் இவ்வாறு நீ புலம்பியிருக்க மாட்டாய்.

மனிதன்: சரி, உன்னைப் பற்றி கொஞ்சம் சொல்வாயா?

குர்ஆன்: சொல்கிறேன் கவனமாகக் கேள். நான் அல்லாஹ் வின் வஹியால் இறக்கியருளப்பட்டவன். என்னை தினமும் ஓதினால் வாழ்வு சுகம்பெறும். என்னிடத்தில் உளநோய்க்கும் உடல்நோய்க்கும் மருந்துண்டு. நான் ஒரு சட்டக் களஞ்சியம்; என்னிடம் எல்லாப் பிரச்சி னைகளுக்கும் தீர்வுண்டு. என்னுடன் சேர்ந்திருப்ப வர்களுக்கு வாழ்வில் பரக்கத்தை ஏற்படுத்துவேன்.

மனிதன்: அற்புதம்! அதிசயம்! அப்படியானால்... இதற்குப் பிறகு என் நோய்களுக்கு மருந்தாவாய். சோதனை களில் என்னை சாதனை புரிய வைப்பாய், அப்ப டித்தானே!

உன்னைத் தினமும் ஓதிடுவேன் ! வஹியின் வாச லாய் வந்த வசந்தமறையே! என் வாழ்வோடு இணைந்திருக்க வருவாயா? நான் உன்னோடு உறவாட விடுவாயா? உன் நிழலில் வாழ இடம் தருவாயா?

குர்ஆன்: மனிதா? ஏன் நீ என்னிடம் அனுமதி கேட்கிறாய்? நான் 1432 வருடங்களுக்கு முன்னர் இறக்கப்பட்டது உனக்காகத்தானே!

இன்னும் ஏன் தாமதிக்கிறாய்? என்னோடு பயணிக்க வா. மனிதா! உன் பாதை தெளிவாகி விட்டது.

பாத்திமா பாக்கிர்
முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கள் எலிய

# முஸ்லிமுக்குரிய அழகிய பண்புகள்

**தனது இரட்சகனுடன்...**

- விழிப்புணர்வுள்ள இறைநம்பிக்கையாளர்.
- இரட்சகனின் கட்டளைக்கு அடிபணிவார்.
- அல்லாஹ் விதித்ததைப் பொருந்திக் கொள்வார்.
- அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை இலட்சியமாகக் கொள்வார்.

**தனது நப்ஸுடன்...**

- உண்பது குடிப்பதில் நடுநிலை பேணுவார்.
- உடற்பயிற்சி செய்து வருவார்.
- உடல், உடை தூய்மை பேணுவார்.
- தூய உள்ளத்துடன் செயற்படுவார்.

**தனது ஆன்மாவுடன்...**

- வணக்கங்களால் ஆன்மாவை பிரகாசிக்கச் செய்வார்.
- ஈமானின் சபைகளையும் சான்றோரையும் சார்ந்திருப்பார்.
- துஆக்களை அதிகமாக ஓதுவார்.
- தொழுகையில் மிகவும் பேணுதலாக நடப்பார்.
- அல்லாஹ்வின் அடிமையென உறுதிப்படுத்துவார்.

**தனது பெற்றோருடன்...**

- உபகாரம் புரிவார்.
- அவர்களது அந்தஸ்தையும் கடமைகளையும் அறிந்து செயற்படுவார்.
- அவர்களை நோவினை செய்ய மாட்டார்.
- அன்புடன் கவனித்துக் கொள்வார்.

எம்.யூ.எப். சானாஸ்
தரம்-11, மட்/பாத்திமா சஹ்ரா
ம.அ.க., ஓட்டமாவடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்குத் தெரியுமா

- அமெரிக்காவில் கொல்லப்பட்ட பிரபல நீக்ரோ தலைவர்களுள் ஒருவர் **- மார்டின் லூதர் கிங்.**
- அமெரிக்கா கொடியிலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கை **- 50**
- தக்காளியை முதன்முதலில் பயிரிட்ட நாடு **- அயர்லாந்து**
- உலகிலேயே உப்புச் சுவை அதிகமாகவுள்ள கடல் **- சாக் கடல்**
- மழைத் துளியிலுள்ள விட்டமின் **- $B_{12}$**
- நதி இல்லாத நாடு **- சஊதி அரேபியா**
- “பூமலை நாடுகள்” என்று அழைக்கப்படுபவை **- சார்க் நாடுகள்**
- உலகில் அதிகளவில் பயிரிடப்படும் பழம் **- அப்பிள்**
- திருமணத்தின்போது தேசிய கீதம் பாடும் நாடு **- நைஜீரியா**
- வருமான வரியை முதலில் அறிமுகப்படுத்திய நாடு **- இங்கிலாந்து**

பாத்திமா ரஷா
தரம்-09, ஹிஸ்புல்லா ம.க.
தெலியாகொன்ன, குருநாகல்

# நாடும் தலைநகரமும்

| | | |
|---|---|---|
| • வட சூடான் | – | கர்தூம் |
| • சுவிட்சர்லாந்து | – | பாபேன் |
| • செனகல் | – | டகார் |
| • சோமாலியா | – | மொகாடிஷு |
| மொரிஷீயஸ் | – | போர்ட் லூயிஸ் |
| • ருவாண்டா | – | கிகாலி |
| • லிபியா | – | திரிபோலி |
| தன்சானியா | – | டோடோமபா |
| • மடகஸ்கார் | – | அண்டானனாரிவோ |
| • மொசாம்பிக் | – | மாபுடோ |
| • சிம்பாப்வே | – | ஹராரே |
| • நைகர் | – | நியாமி |

எம்.ஏ.எப். ஹப்ஸா அத்தாஸ்
தரம்-09, மடிகே மு.ம.வி. இப்பாகமுவ

# அறிய பல தகவல்கள்

தனது எடையைப் போல 50 மடங்கு சுமையைத் தூக்க முடியுமான உயிரினம் **– எறும்பு**

உலகில் மிக நீண்ட ஆயுள் கொண்ட உயிரினம் **– நீலத் திமிங்கிலம் (500 வருடங்கள்)**

பிறந்த அன்றே இறக்கும் பிராணி – **ஈசல்**

இனிப்பின் சுவையை அறிய முடியாத பிராணி **– பூனை**

நீரின்றி அதிக காலம் வாழக்கூடிய உயிரினம் **– எலி**

வாழ்நாளில் ஒரே ஒரு முட்டையிடும் பறவை **– பென்குயின்**

நேராக நடக்கத் தெரியாத உயிரினம் **– நண்டு**

நிலத்தில் வாலை ஊன்றி நிற்கக் கூடிய விலங்கு **– கங்காரு**

எம்.எப்.எப். சஸ்மினா
தரம்-08, வெலம்பொடை மு.ம.வி
வெலம்பொடை.

# அல்குர்ஆன் பொது அறிவு

மிக நீண்ட ஸூரா
– ஸூரா அல்பகரா, 286 வசனங்கள்

மிகச் சிறிய ஸூரா
– ஸூரா அல்கவ்ஸர், 03 வசனங்கள்

பிஸ்மி இடம்பெறாத ஸூரா – ஸூரா அத்தவ்பா

இரண்டு பிஸ்மி இடம் பெறும் ஸூரா
– ஸூரா அந்நம்ல்

“மீம்” வராத ஸூரா – ஸூரா அல்கவ்ஸர்

| | |
|---|---|
| ஜுஸ்கள் | – 558 |
| மன்ஸில்கள் | – 07 |
| மதனி ஸூராக்கள் | – 28 |
| மக்கி ஸூராக்கள் | – 86 |
| ஆயத்துக்கள் | – 6666 |

எப். சுலைஹா நஸார்
தரம்-07, அல்-ஸபா மு.ம.வி., பொல்கொல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சல்



**அபாய அறிகுறி**

டெங்குக் காய்ச்சல் நுளம்பினால் பரப்பப்படும் ஓர் நோய் ஆகும். இந்நோய் பற்றிய சில தகவல்கள்...

**டெங்கு நோயின் சாதாரண அடயாளங்கள்**

கடும் காய்ச்சல், தலைவலி, வாந்தி, உடல் வலி, வயிற்று ளைச்சல்.

இவை சாதாரணமாக மூன்று அல்லது நான்கு தினங்களின் பின் குணமாகிவிடும். எனினும் சிலருக்கு டெங்கு குருதிப் பெருக்கு நோய் ஏற்படக் கூடும்.

**டெங்கு குருதிப் பெருக்கு நோயின் அறிகுறிகள்**

- முரசினால், மூக்கினால் இரத்தம் கசிதல்.
- மலசலத்துடன் இரத்தம் வெளியேறல்.
- கடுமையான வயிற்று நோ.
- வாந்தி, மலம் கறுப்பு நிறமாகுதல்.
- தோலின் அடியில் சிறிய சிவப்பு அடையாளம் தோன்றுதல்.
- கண்கள் சிவப்பு நிறமாதல்.

**டெங்கு அதிர்ச்சி நிலையின் அறிகுறிகள்**

- உடல் வெளிறல்.
- உடம்பு குளிர்ந்து போதல்.
- கலக்கமான, தூக்கமான நிலை.
- மூச்சுத் திணறல்.

இவ்வாறான நோய் அடையாளமுள்ள நோயாளிகள் உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற வேண்டும்.

**நாம் என்ன செய்ய வேண்டும்?**

- நோய் பரப்பும் நுளம்புகளை கட்டுப்படுத்தல்.
- நோயாளிக்கு போதியளவு ஓய்வு கொடுத்தல்.
- சிவப்பு, கறுப்பு நிற ஆகாரங்களை தவிர்த்தல்.
- அதிகளவு நீராகாரம் அருந்தல்.
- 'அஸ்பிரின்' வகை மருந்துகளை தவிர்த்தல்
- பரசிற்றமோல் சரியான அளவில் கொடுத்தல்.
- டெங்கு கொடூரமானது; வருமுன் காக்க வேண்டியது. டெங்கு காய்ச்சல் பற்றி சந்தேகம் ஏற்பட்டால் உடனே வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லல் வேண்டும்.

**"டெங்கு வருமுன் காப்போம்"**

ஏ.என்.எம். நுஹா
மடலஸ்ஸ, கெகுணகொல்ல


| நிகழ்வுகள் | ஆண்டுகள் |
|---|---|
| ❑ உலக யுத்தம் ஆரம்பமானது | 1914 |
| ❑ உலக யுத்தம் முடிவடைந்தது | 1918 |
| ❑ இரண்டாம் மகா யுத்தம் ஆரம்பமானது | 1938 |
| ❑ இரண்டாம் மகா யுத்தம் முடிவடைந்தது | 1945 |
| ❑ ஜெர்மன் இரண்டு நாடுகளாப் பிரிந்தது | 1945 |
| ❑ அவை மீண்டும் ஒரே நாடாக இணைத்தது | 1990 |
| ❑ ஐ.நா. தாபிக்கப்பட்டது | 1945 |
| ❑ தபால் முத்திரை வெளியிடப்பட்டது | 1957 |
| ❑ சாரணர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது | 1907 |
| ❑ நோபிள் பரிசு ஆரம்பிக்கப்பட்டது | 1901 |
| ❑ சார்க் அமைக்கப்பட்டது | 1985 |
| ❑ சார்க் அமைப்பின் சர்வதேச மகளிர் பிரகடனம் | 1991 |
| ❑ மே தினம் ஆரம்பிக்கப்பட்டது | 1886 |
| ❑ யுனெஸ்கோ நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது | 1946 |
| ❑ சந்திரனில் காலடி எடுத்து வைத்தது | 1969 |

என். ஆஷிக்,
தரம்-10, சது/ அல்-அஷ்ரப் ம.ம.வி, இறக்காமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆன் அருளப்படல்; பத்ர்; மக்கா வெற்றி



**ரமழான்** மாதம் பலவகையில் சிறப்புப் பெறுகிறது. இதில் அல்குர்ஆன் அருளப்பட்டமை, பத்ர் போராட்டம் வெற்றியடைந்தமை, இஸ்லாம் வெற்றியோடு மக்காவில் நுழைந்தமை என்பன முக்கியமானவை ஆகும்.

### அல்குர்ஆன் அருளப்படல்

அல்லாஹுத் தஆலா அவனது அருமைத் தூதரான அண்ணலாருக்கு அல்குர்ஆனை இந்த ரமழான் மாதத்தில் அருளினான். முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் ஹிராக் குகையிலே தனித்திருந்து தியானிக்கிறார்கள். அன்றைய ஜாஹிலிய்யத்தை எவ்வாறு அகற்றுவது என்று சிந்திக்கிறார்கள். இந்த ஜாஹிலிய்யத்தில் இருந்து மக்களை எவ்வாறு விடுவிப்பது என்று தனிமையில் இருந்து சிந்தித்துக் கொண்டிருக்கும் போதுதான் வஹி அருளப்படுகிறது.

ஹிராவிலே முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலைஹிஸ்ஸலாம்) மூலம் அல்குர்ஆன் அருளப்பட்டதைத்தான் முதல் வஹி அருளப்பட்ட நிகழ்வு, லைலதுல் கத்ர், நுபுவ்வத் என்ற பெயர்களால் அழைக்கின்றோம். அல்குர்ஆன் இறக்கப்பட்ட மாதம் என்பதால் ரமழான் தனிச் சிறப்பு பெறுகின்றது. இறைத்தூதின் ஆரம்பம் இந்த ரமழான்தான்.

முதலாவது வஹி 'இக்ரஃ...' என்ற சொல்லோடு ஆரம்பித்தது. 'இக்ரஃ' என்றால் ஓதுவீராக, வாசிப்பீராக எனப் பொருள்படும். ஓதுங்கள், வாசியுங்கள் என்றால் அறிவைத் தேடிக் கற்பதையே கருதுகிறது. அறிவுக்கான ஆரம்ப வசனமான 'இக்ரஃ...' அருளப்பட்ட மாதமான ரமழான், அறிவியல் அற்புதம் அல்குர்ஆன் அருளப்பட்ட அருள்மிகு மாதமாகும். அல்குர்ஆன் அருளப்பட்ட, அதுவும் 'இக்ரஃ வாசிப்பீராக, உமது இரட்சகனின் பெயரால்... என்ற வழிகாட்டல் வந்த மாதத்தில் நாம் அந்த அருமையான கட்டளையைப் பின்பற்றினால் ஏராளமான நன்மைகளை அடைந்து கொள்ள முடியுமல்லவா?

### பத்ர்; போராட்டத்தின் ஆரம்பமும் வெற்றியும்

ரமழான் ஏராளமான சிறப்புக்களைப் பெற்றிருப்பது போலவே பல்வேறு சாதனைகளையும் கண்டுள்ளது. அந்தவகையில் முஸ்லிம்களைப் பொறுத்தவரை முக்கியமான திருப்புமுனைதான் பத்ர் ஆகும். ரமழான் மாதத்தில்தான் முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களும் அன்னாரின் தோழர்களும் பத்ர் களத்தில் குறைஷிகளை எதிர்த்துப் போராடுகிறார்கள்.

ஹி.2 ரமழான் 17ஆம் நாள் குறைஷிகளோடு முஸ்லிம்கள் போராடுகிறார்கள். ஜாஹிலிய்யத் அறியாமையை எதிர்த்து இஸ்லாம் போராடுகிறது. அப் போராட்டத்தில் அறியாமை தோல்வியடைகிறது; இஸ்லாம் வெற்றியடைகிறது.

முஹாஜிர்கள் அன்ஸாரிகள் உட்பட மொத்தம் 313 ஸஹாபாக்கள், 1000 குறைஷிகளை எதிர்த்துப் போராடுகிறார்கள். அந்த பத்ர் களத்தில் அல்லாஹ்வின் அருள்களைக் கண்களால் காண்கிறார்கள். மலக்குமார்களைக் கொண்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ் அவர்களுக்கு அருள்புரிந்தான்.

பத்ர் போராட்டத்தில் முஸ்லிம்கள் குறைஷி களை வெற்றி கொள்கிறார்கள். இறைத்தூது வஹி அருளப்பட்டதிலிருந்து பத்ர் களத்தில் நேருக்கு நேர் குறைஷிகளை சந்திக்கும் வரைக்கும் அவர் களால் இன்னல்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாக்கப்பட்ட முஸ்லிம்கள், அன்று அவர்களுக் கெதிராக போர்க்கொடி தூக்கிய மாதம் இந்த ரமழான் ஆகும். குறைஷிகளை போராடி வென்ற மாதம் ரமழான் மாதமாகும். இதனால்தான் இது வரலாற்றுத் திருப்புமுனையாகக் கருதப்படு கின்றது.

## ரமழான்; மாபெரும் வெற்றி

முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல் லம்) அவர்கள் குறைஷிகளோடு ஹுதைபிய்யா உடன்படிக்கை செய்திருந்தார்கள். அந்த உடன் படிக்கையின் நிபந்தனைகளில் ஒன்றை குறைஷி கள் முறித்ததன் காரணமாக முஸ்லிம்கள் மக்கா மீது படையெடுத்து வருகின்றார்கள். இது நிகழ்ந் தது ரமழான் மாதத்தில் ஆகும். இம் மாபெரும் வெற்றி கிடைத்த மாதமாக ரமழான் மாதம் சிறப்புப் பெறுகிறது.

ஹி.8 ரமழான் 10ஆம் நாள் முஹம்மத் (ஸல்லல் லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் 10,000 வீரர்களுடன் மக்காவை நோக்கி வருகின்றார்கள். மதீனாவிலிருந்து சில நாட்கள் பயணம் மேற் கொண்டு ஹி.8 ரமழான் 17ம் நாள் மக்காவை அண்மிக்கிறார்கள். 20ம் நாள் மக்காவை வெற்றி கொள்கிறார்கள். மக்கா வெற்றி கொள்ளப்பட்ட நிகழ்வு இஸ்லாமிய வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வு ஆகும். அதுதான் இஸ்லாம் ஜாஹிலிய் யத்தை முழுமையாக அழித்து வென்ற நாளாகும்.

மக்காவை வெற்றி கொண்ட அன்று நபிகளார் முஹாஜிர்கள், அன்ஸாரிகள் புடைசூழ கஃபா வில் உள்ள 360 சிலைகளை அழித்து அதனைத் தூய்மைப்படுத்தினார்கள். கஃபாவைத் தவாப் செய்து அங்குள்ள ஹஜருல் அஸ்வத் கல்லை முத்தமிட்டார்கள். அங்கு தவாப் செய்த பின்னர் உஸ்மான் இப்னு தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் கஃபாவின் திறப்பை வாங்கி அத னைத் திறக்கக் கூறினார்கள்.

முஹம்மத் (ஸல்லல்லாஹீ அலைஹி வஸல் லம்) அவர்கள் குறைஷிகளிடம் கேட்டார்கள், "நான் உங்களிடம் எவ்வாறு நடந்து கொள்வேன் என கருதுகின்றீர்கள்?"

குறைஷிகள் கூறினர்: "நீங்கள் எங்களுக்கு சிறந்த சகோதரனாகவும் எங்களின் சிறந்த சகோத ரனின் மகனாகவும் இருக்கின்றீர்கள். நீங்கள் எங்களுடன் சிறந்த முறையிலேயே நடந்து கொள்வீர்கள்."

நபியவர்கள் கூறினார்கள்: "நான் உங்களுக்கு யூசுப் நபி தனது சகோதரருக்குக் கூறியதையே கூறுவேன். நீங்கள் பழிக்குப் பழிவாங்கப்பட மாட்டீர்கள். உங்களை நான் மன்னிக்கிறேன்."

தொழுகைக்குரிய நேரம் வந்ததும் பிலால் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அதான் கூறி னார்கள். அது மக்கா நகரில் ஒலித்தது.

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட இரண்டாம் நாள் மக்களுக்கு நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள்.

"மக்களே! நிச்சயமாக அல்லாஹ் வானங்கள், பூமியைப் படைத்த அன்றே மக்காவுக்கு அளப் பரிய கண்ணியத்தை வழங்கியிருக்கிறான். அது மறுமை நாள் வரை கண்ணியம் பொருந்திய தாகவே இருக்கும். அல்லாஹ்வையும் மறுமை யையும் நம்பிக்கை கொண்டுள்ள யாரும் அங்கு கொலை புரிவதோ, மரம் செடி கொடிகளை அகற்றுவதோ கூடாது..."

மக்கா வெற்றி கொள்ளப்பட்ட இந்த நிகழ்வை பத்ஹுல் முபீன்- தெளிவான வெற்றி என அல்குர்ஆன் குறிப்பிடப்படுகிறது.

இந்த மக்கா வெற்றி எமக்கு எவ்வகையான படிப்பினையைத் தர வேண்டும் என உஸ்தாத் குர்ரம் முராத் அவர்கள் குறிப்பிடும்போது, "துல்லியமாக திட்டமிடப்பட்ட செயல்திட்டம் நமக்குத் தேவை. மற்றவர்கள் மீது கருணையை, கிருபையை, மன்னிப்பை அளிக்கும் குணமும் மறக்கும் மனப்பான்மையும் நமக்குத் தேவை.

நம்மவர்கள் மீதான நேசம், நட்பு, அன்பு, கனிவு, கரிசனம் இவற்றோடு பகைவர்களையும் நேசிக்கும் குணம், அன்பை அள்ளி வழங்கும் தன்மை நமக்கு கண்டிப்பாகத் தேவை.

நினைவில் கொள்ளுங்கள்! உலகை வெற்றி கொள்ளும் ஒரே சக்தியாக அன்பே திகழுகிறது" எனக் கூறுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# How much do you know?

Assalamu alaikum dear friends,

This is the month of August. In the month of August in 1963, Dr. Martin Luther King Jr gave his famous speech '**I have a dream**'.
Look at this ,

"I have a dream that my four little children will one day live in a nation where they will not be judged by the color of their skin but by the content of their character"

This is my favourite part from the speech.

To day his dream has come true.

***Come on dear friends, let us dream! Let us dream for the best, and work hard to achieve it.***

This time I am going to test your hard work

Try to complete the exam paper I've given. You may take the help of your teacher. Or you can even use our old issues from January 2011 to look for more information. But make sure you answer all the questions.

*1. **Fill in the blanks***

1. ___________ is the greetings that can be conveyed in any season.
2. The year 2011 is the year of _______________
3. Making a _______ map helps us to do a clear revision.
4. Most natural disasters are caused by changes in the ___________


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. A huge food shortage is called as a _____
6. A _____ is a big area with a number of trees together.
7. Trees produce food _______ the leaves.

***2. Write down the meanings***

1. valuable
2. seldom
3. rear
4. predict
5. dispute

***3. List 5 advantages and 5 disadvantages of watching television.***

***4. Draw pictures for the following***

A tall shady tree — An active volcano

A red fish — A spaceship

A sleepy cat

***5. Join the matching pairs***

| | |
|---|---|
| 1. Apple, Carrot, Egg, Milk | **Hobbies** |
| 2. Cartoons, News, Movies | **Trees** |
| 3. Swami and friends, Sleeping beauty, Goldilocks | **Healthy food** |
| 4. Neem, Mango, Jack | **Books** |
| 5. Raring pets, Trekking, collecting stamps | **TV programmes** |

## Your corner

### Friendship



Friendship is there
Wherever you go.
Friendship is there
When you over dose.
Friendship is life
With a little dares


M.R.F.Shifana
Gr-10B, Al-Azhar M.M.V, Hemmathagama.

### Fasting in Ramadan

Ramazan is the month during which the holy Quran was revealed. Ramazan , the ninth month of the Islamic calendar is observed as a month of fasting. Fasting must be observed by every adult Muslim except the insane, pregnant women, and travelers.

The prophet Muhammed (SAW) said that fasting is an amour with which one protects one's self in the fight against the physical tendency to satisfy hunger. This enables him to overcome his worldly desires. It teaches equality which is not witnessed even in prayer. Thus fasting places all men rich or poor on the same plight of hunger. During fasting a person should avoid food, water and should be careful from any sinful activity.

Mohamed Milham Marzook
Grade 8, Wavita Maithi Maha Vidyalaya, Atulugama, Bandaragama





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Should Children Use Mobile Phones?

A mobile phone has its advantages as well as disadvantages. It is very useful when it comes to contacting someone in an emergency. It is the best communication tool as it helps us contact anyone, such as the police or medical personnel, in an emergency. However, it can be misused too depending on the way one uses it.

I think mobile phones are not suitable for children due to several reasons. The first is that children are young and inexperienced. They face the problem of selecting what is good and bad. Many children play games on their mobile phones and waste time and money.

Children below 18 years can do without such mobile phones because these phones come with games, songs, facebook, cameras and other facilities which could be used in a wrong manner. Specially if they are not thought how to use them properly. So I think mobile phones are not a good device for children.

A.R.Abdur Rahman
Grade 11, BT/AL Hira Maha Vidyalaya,
Kattankudy.

# My self

My name is Asham. I am a young boy. I am sixteen years old. I have only one sister called Roohy Farvin. I study at T/ Kinniya central college. My father's name is Abdeen. He is a teacher. My mother's name is Raleela. She is a house wife. I like my mama and dada. I like to eat ice-cream. I like to drink Sprite.

My hobbies are collecting stamps, watching TV and reading magazines. My favourite subjects are English and Sinhala. I like to study at 'Jamiya Naleemiya'. It is a nice place. My ambition is to be a lawyer. I hope that I will be able to do it.

A.M. AshamGrade- 12 Arts
T/ Kinniya central College. Kinniya -05

## A mail

My name is Nabeel.
Aharam is a very nice paper.
I like Aharam

Nabeel



I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

HOW MUCH DO YOU KNOW?

A 61/5,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

## 10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

கலாநிதி கே.எம்.எம். இக்பால்

### 10 ம் தரம்

*01. பின்வருவனவற்றின் புதிய பெயர்களைத் தருக.*

| | |
|---|---|
| i. கதம்ப நதி | xi. ஊராத்தோட்டை |
| ii. கம்பரகந்த நதி | xii. உருவெல |
| iii. கரிந்தி நதி | xiii. செங்கடகல |
| iv. மகாவாலுகா நதி | xiv. கதரகம |
| v. ஜஜ்ஜர நதி | xv. ஜம்புகோளப் பட்டினம் |
| vi. குடிகந்த நதி | xvi. சிங்ககிரி |
| vii. கல்யாணி நதி | xvii. சேத்தியகிரி |
| viii. கோண நதி | xviii. கோகர்ண |
| ix. காரகங்கை | xix. புலத்தி நகர் |
| x. ஆகாச கங்கை | xx. மாந்தை |

**சரியான விடையின் கீழ் அடையாளமிடுக.**

1. வல்லிபுரம் சாசனத்தோடு தொடர்புபடும் மன்னன் யார்?
   - i. எல்லாளன்  ii. பரராச சேகரன்
   - iii. வசபன்  iv. 2ம் அக்போ

2. நிரல் 1 — நிரல் 2
   - அ. மகதம் — A. ஜெனி
   - ஆ. வத்சய — B. பவுளுப்
   - இ. அவந்தி — C. கௌசம்பி

   நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடை.

   i. BCA  ii. BAC  iii. ABC  iv. ACB

3. மகத இராச்சிய மன்னன் காலத்தில் இடம் பெற்ற முக்கிய நிகழ்வு எது?
   - i. வெளிநாட்டினரின் படையெடுப்பு
   - ii. கலிங்கப் போர்
   - iii. புத்தர் அவதாரம்
   - iv. இலங்கைக்கு பௌத்தம் வந்தமை

4. குப்த பேரரசின் முதலாவது மன்னன் யார்?
   - i. சமுத்திர குப்தன்  ii. அசோகன்
   - iii. தனநந்தன்  iv. சந்திர குப்தன்

5. நிரல் 1 — நிரல் 2
   - அ. மல்வத்து ஓயா — A. விஜித கிராமம்
   - ஆ. கலா ஓயா — B. கதிர்காமம்
   - இ. மகாவலி கங்கை — C. விஜிதபுர
   - ஈ. மாணிக்க கங்கை — D. அனுராத கிராமம்

   நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான விடை.

   i. BCAD  ii. DACB  iii. DABC  iv. DCBA

6. அனுராதபுரத்தின் இறுதி மன்னன்
   - i. எல்லாளன்  ii. 4ம் மகிந்தன்
   - iii. துட்டகைமுனு  iv. 5ம் மகிந்தன்

7. கிரித்தலைக் குளத்தைக் கட்டியவன்
   - i. 2ம் அக்போ  ii. 1ம் அக்போ
   - iii. 3ம் அக்போ  iv. வசபன்

8. தப்ரபேன் என்று இலங்கையை அழைத்தவர்
   - i. வாஸ்கொடகாமா  ii. தொலமி
   - iii. சுலைமான்  iv. மார்க்கோ போலோ

9. இலங்கையின் ஆறாவது தலைநகரம்
   - i. தம்பதெனியா  ii. கோட்டை
   - iii. கம்பளை  iv. காலி

10. இபுனு பதூதா இலங்கைக்கு வந்த ஆண்டு

    i. 1441  ii. 1331  iii. 1344  iv. 1505

### விடைகள் 10ம் தரம்

புதிய பெயர்கள்

| | |
|---|---|
| i. மல்வத்து ஓயா | xi. ஊர்காவற்துறை |
| ii. மாணிக்க கங்கை | xii. எத்திரிமலை |
| iii. கிருண்டி ஓயா | xiii. கண்டி |
| iv. மகாவலி கங்கை | xiv. கதிர்காமம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v. தெதுறு ஓயா

vi. கும்புக்கண் ஓயா

vii. களனி கங்கை

viii. கலா ஓயா

ix. கல் ஓயா

x. அம்பன் கங்கை

xv. காங்கேசன்துறை

xvi. சிகிரியா

xvii. மிகிந்தலை

xviii. திருகோணமலை

xix. பொலன்னறுவை

xx. மன்னார்

பல்தேர்வு வினாக்களுக்கான விடைகள்

| | |
|---|---|
| *1* - iii | *6* - iv |
| *2* - i | *7* - i |
| *3* - iii | *8* - ii |
| *4* - vi | *9* - iii |
| *5* - ii | *10* - iii |

## 11 ம் தரம்

i. 1ம் உலக மகா யுத்தத்தில் ஈடுபட்ட சில நாடுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் மத்திய வல்லரசு அணியில் இடம்பெற்ற 3 நாடுகளை குறித்துப் பெயரிடுக.

இங்கிலாந்து, துருக்கி, பல்கேரியா, போர்த்துக்கல், ஆஸ்திரியா

ii. 1ம் உலக மகா யுத்தத்திற்கான உடனடிக் காரணத்தைத் தருக.

iii. 1ம் உலக மகா யுத்தத்திற்கான காரணிகள் இரண்டை விளக்குக.

iv. சர்வதேச சங்கம் தோல்வி அடைந்தமைக் கான காரணிகள் இரண்டை விளக்குக.

**விடை**

i. துருக்கி, பல்கேரியா, ஆஸ்திரியா

ii. ஆஸ்திரியாவும் சேர்பியாவும் ஏற்கனவே எல்லைப் பிரச்சினையால் பகைமை கொண்டிருந்தன. ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசன் பிரான்சிஸ் பேடினைட் சேர்பியா நாட்டிலுள்ள சரஜிவோ நகரில் தன் மனைவியோடு காரில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த வேளையில் 1914.06. 28ல் சேர்பியர் இருவரால் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். இதற்காக ஆஸ்திரியா சேர்பியாவிடம் நட்ட ஈடு கேட்டது. சேர்பியா அதற்கு மறுத்தது. இதனால் சேர்பியாவுக்கு எதிராக ஆஸ்திரியா யுத்தப் பிரகடனம் செய்தது. ஆஸ்திரியாவுக்கு ஆதரவாக ஜேர்மனி கலந்து கொண்டது. சேர்பியாவுக்கு ஆதரவாக ரஷ்யா யுத்தத்தில் ஈடுபட்டது. இவ்வாறு சரஜிவோ சம்பவமே 1ம் உலக யுத்தத்திற்கு உடனடிக் காரணமாக அமைந்தது.

iii. பிஸ்மார்க்கின் உடன்படிக்கைக் கொள்கை

ஜேர்மனியை ஆட்சிசெய்த ஒட்டோவன் பிஸ்மார்க் தனக்கு எதிரியாக விளங்கிய பிரான்ஸை தனிமைப்படுத்துவதற்காக பல நாடுகளுடன் இரகசிய உடன்படிக்கையினை செய்தான். 1873 இல் ரஷ்யா, ஜேர்மனி, ஆஸ்திரியா ஆகிய 3 நாடுகளையும் இணைத்து 3 பேரரசர்களின் சங்கம் என்பதை உருவாக்கினான். 1879 இல் ஆஸ்திரியாவுடன் யுத்த உடன்படிக்கையைச் செய்து கொண்டான். 1882இல் இத்தாலியையும் இணைத்து மத்திய ஐரோப்பிய வல்லரசுகளின் நட்புக்கூட்டு என்ற கூட்டமைப்பை ஏற்படுத்தியதுபோல பிரான்சும் ஒரு கூட்டமைப்பை ஏற்படுத்தியது. இவ்வாறு இரு அணிகள் உருவாகியமை முதலாம் உலக யுத்தம் உருவாகக் காரணமாக அமைந்தது.

ஜேர்மனியின் பேரரசுக் கொள்கை

ஜேர்மனி பின்பற்றிய பேரரசுக் கொள்கையானது 1ம் உலக மகா யுத்தம் தோன்றக் காரணமாக அமைந்தது. ஜேர்மனிய நகரமான பேர்ளினில் இருந்து பக்தாத் வரை ஒரு புகையிரதப் பாதையை அமைக்க ஜேர்மனி திட்டமிட்டது. இதற்கு துருக்கி உதவி வழங்க முன்வந்தது. இத்திட்டத்தை பிரித்தானியா உட்பட பல நாடுகள் எதிர்த்தன. மேலும் ஜேர்மனி தனது கப்பற் படையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தது. 'எம்.எம்.எம். டொரநோட்' என்ற கப்பலைக் கட்ட ஜேர்மனி முயற்சி செய்தது. 1914ல் இவ்வகைக் கப்பல்கள் ஜேர்மனியிடம் 17 காணப் பட்டன.

iv. முக்கிய வல்லரசு நாடுகள் இடம்பெறாமை

முதலாம் உலக மகா யுத்தம் 1918ல் முடிவடைந்தது. இவ்வாறான ஒரு யுத்தம் இனிமேல் ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தோடு சர்வதேச சங்கத்தை நிறுவ அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பூட்ரோ வில்சன் முயற்சி செய்தார். இந்த சங்கத்தில் 55 நாடுகள் அங்கம் வகித்தன. ஆனால் முக்கிய வல்லரசு நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா, ஜேர்மனி போன்ற நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கம் வகிக்கவில்லை. இந்த அமைப்பில் சேரு வதற்கான அங்கீகாரத்தை அமெரிக்க காங்கிரஸ் வழங்கவில்லை. முதலாம் யுத்தத்திற்கான பொறுப் பான நாடு என்பதனால் ஜேர்மனியையும் பொது வுடமைப் புரட்சி நடத்தியதனால் ரஷ்யாவையும் அங்கத்துவ நாடுகளாக இணைத்துக் கொள்ள வில்லை. இவ்வாறு பலமான வல்லரசு நாடுகள் இந்த அமைப்பில் இடம்பெறாததனால் பலவீன மான சபையாக சர்வதேச சங்கம் விளங்கியது.

ஆக்கிரமிப்பை தடுப்பதற்கான படை இல்லாமை

அங்கத்துவ நாடுகள் ஆக்கிரமிப்பு நடவடிக் கைகளில் ஈடுபட்டால் அதைத் தடுக்கும் ஆற்றல் சர்வதேச சங்கத்திடம் இருக்கவில்லை. இதன் காரணமாக இச்சங்கத்தின் தீர்மானங்களையும் எச்சரிக்கைகளையும் பல நாடுகள் மீறி நடந்தன. இத்தாலி அபீசீனியாவை (எதியோப்பியா) ஆக்கி ரமித்தபோது அதனைத் தடுக்கும் சக்தியற்ற அமைப்பாக இச்சங்கம் விளங்கியது. ஜப்பான் மஞ்சூரியாவை தாக்கியபோதும் சர்வதேச சங் கத்தினால் அதனைத் தடுத்து நிறுத்த முடிய வில்லை. இதற்கு தற்போது ஐக்கிய நாட்டவை யத்திடம் காணப்படுவது போன்று ஓர் அமைதி காக்கும் படை (Peace Keeping Force) இல்லா திருந்ததே காரணமாகும். சுயெஸ் கால்வாய் நெருக்கடியின்போது அங்கு ஒரு யுத்தம் ஏற்படா மல் தடுப்பதற்காக முதலாவது அமைதி காக்கும் படையை ஐக்கிய நாட்டவையம் எகிப்தின் எல்லைக்கு அனுப்பியது.

## அகரத்தின் வினா-விடைப் போட்டி-07

முதலாம் பரிசு: ஆர்.எப். ஷர்மிலா
பாத்திமா ஸஹ்றா மகளிர் அ.க., ஓட்டமாவடி

**வெற்றி பெறுவோருக்கு பெறுமதியான நூல்கள், இறுவட்டுக்கள் வழங்கப்படும்.**

(உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி, ஆகஸ்ட் 25ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்)

அனுப்ப வேண்டிய முகவரி
அகரம்
வினா-விடைப் போட்டி
77, தெமடகொட வீதி,
கொழும்பு-09

### வினாக்கள்

1. பத்ர் யுத்தத்தின்போது தங்குவதற்கு உரிய இடத்தைத் தெரிவு செய்ய ஆலோசனை வழங்கிய ஸஹாபி யார்?
2. ஒட்டகச் சிவிங்கி விரும்பி உண்ணும் தாவரம் எது?
3. தபால் திணைக்களத்தை உருவாக்கிய கலீபா யார்?
4. மக்கா வெற்றி நிகழ்ந்தது எப்போது?
5. 'ஆலமாத் லங்காபுரி' என்ற பத்திரிகை எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது?
6. Mind Mapping என்பதன் அர்த்தம் என்ன?
7. ஜாபிர் இப்னு ஹய்யானின் நூல்களில் லத்தீன் மொழிக்கு பெயர்க்கப்பட்ட முதலாவது நூல் எது?
8. ஒட்டகச் சிவிங்கிகள் இரவில் எவ்வளவு நேரம் நித்திரை செய்யும்?
9. இரண்டாம் மகா யுத்தம் ஆரம்பமான ஆண்டு எது?
10. அல்குர்ஆனைக் கற்றவரின் பெற்றோருக்கு மறுமையில் வழங்கப்படும் கூலி என்ன?

### பரிசுக்குரியவர்கள்:

ஷப்ரானா ஹஸன், பதுளை
எம்.ஐ.எப். றிப்கா, பண்டாரகொஸ்வத்த
அஸ்ரா முஸம்மில், பொல்கொல்ல
எம்.ஏ.எப். அம்னா, பிலிமதலாவ
நஸ்ரின் யாஸீன், கொழும்பு
எம்.எச். பஸீஹா, பொலன்னறுவ
ஆர். றுமைஸா, சம்மாந்துறை
ஏ.எல்.எப். ஹுஸைனா, தம்பலகாமம்
அஸ்பா மர்ஸுக், இரத்தினபுரி
எம்.ஆர். முஸாகிப், மருதமுனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்குர்ஆன் ஓதுவதன் சிறப்பு



**ரமழான்** அல்குர்ஆனின் மாதமாகும். ரமழானில் நோன்பு நோற்கும் நாங்கள் அதற்குரிய நிறைவான கூலியைப் பெற அம் மாதத்தில் அதனை ஓதி சங்கைப்படுத்துவோம். அல்குர்ஆனைக் கற்பதிலும் கற்றுக் கொடுப்பதிலும் ஓதுவதிலும் பல சிறப்புகள் உள்ளது போலவே ரமழானில் அதனை ஓதுவதால் நன்மைகள் பன்மடங்காகக் கிடைக்கின்றன.

### கற்றுக் கொடுப்பதன் சிறப்பு

"உங்களில் சிறந்தவர் அல்குர்ஆனைக் கற்று அதனைக் கற்றுக் கொடுப்பவராவார்." (அல்புகாரி)

### அல்குர்ஆனை ஓதுவதற்கான கூலி

"இறை வேதத்திலிருந்து யார் ஓர் எழுத்தை ஓதுகிறாரோ அவருக்கு ஒரு நன்மை கிடைக்கிறது. ஒரு நன்மை பத்து மடங்கைக் கொண்டதாகும்."
(அத் திர்மிதி)

### மனனமிடுவது, ஓதுவதன் சிறப்பு

"குர்ஆனை மனனமிட்டு ஓதுபவர் சங்கையான மலக்குகளுடன் இருப்பார். அது கடினமானதாக இருந்த போதிலும் திக்கித் திக்கி ஓதினால் அவருக்கு இரண்டு கூலிகள் உள்ளன." (அல் புகாரி, முஸ்லிம்)

குர்ஆன் உடையவருக்கு (மறுமையில்) இவ்வாறு கூறப்படு: "நீர் ஓதுவீராக உலகில் நீர் முறையாகக் குர்ஆனை ஓதியது போன்று ஓதுவீராக, ஏனெனில் உமது தங்குமிடம் நீர் ஓதும் இறுதி வசனத்தில் உள்ளது." (அத் திர்மிதி)

இமாம் கத்தாபி அவர்கள் கூறுகிறார்கள்:

"குர்ஆனின் வசனங்களின் எண்ணிக்கையானது சுவர்க்கத்தின் படித்தரங்களின் அளவில் உள்ளதாகும். எனவே யார் குர்ஆனை முழுமையாக ஓதி இருந்தார்களோ அவர்கள் மறுமையில் சுவனத்தின் படித்தரங்களில் மிக உயர்ந்து விட்டிருப்பார். யார் அல்குர்ஆனில் சில பகுதியை மாத்திரம் ஓதியிருந்தாரோ அவரின் ஏற்றம் அந்த அளவில் இருக்கும். இவ்வாறு அவரின் கூலியின் அளவு அவரின் ஓதலின் அளவிலிருக்கும்."

### குர்ஆனைக் கற்றவரின் பெற்றோருக்குரிய கூலி

"அல்குர்ஆனை ஓதி அதனைக் கற்று அதன்படி நடந்தவரின் பெற்றோருக்கு மறுமை நாளில் ஒளியிலான ஒரு கிரீடம் அணிவிக்கப்படும். அதன் பிரகாசம் சூரியனின் பிரகாசத்தைப் போன்றதாகும். அவர்களுக்கு இரு ஆடைகள் அணிவிக்கப்படும் இவ்விரண்டிற்கும் இவ்வுலகும் ஈடாக மாட்டாது. "நாங்கள் ஏன் இவ்வாறு அணிவிக்கப்படுகின்றோம்?" என அவர்கள் கேட்பார்கள் அதற்கு "உங்கள் பிள்ளை குர்ஆனைக் கற்றதனால்" என்று பதில் கூறப்படும். (அல் ஹாகிம்)

### குர்ஆன் மறுமையில் பரிந்து பேசும்

"குர்ஆனை ஓதுங்கள், ஏனெனில் அது அவர்களுக்கு மறுமையில் பரிந்து பேசக் கூடியதாகும்."
(முஸ்லிம்)

"நோன்பும் அல்குர்ஆனும் அடியானுக்காக மறுமையில் பரிந்து பேசுகின்றன."
(அஹமத், அல் ஹாகிம்)

### அல்குர்ஆனை கற்கும் சபையின் சிறப்பு

"எந்த ஒரு கூட்டத்தினர் இறை இல்லங்களில் ஒன்றுகூடி அல்குர்ஆனை வாசித்து, அதனை விளங்குகின்றார்களோ அவர்கள் மீது அமைதி இறங்குகின்றது, இறையருள் அவர்களை சூழ்ந்து கொள்கின்றது. வானவர்கள் அவர்களைச் சூழ்ந்து கொள்கின்றனர். அல்லாஹ் அவனிடம் உள்ளவர்களிடம் அவர்களை நினைவுகூருகிறான்." (அபூ தாவூத்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அல்குர்ஆனை ஓதுவதற்கான ஒழுங்குகள்

இமாம் இப்னு கதீர் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் அல்குர்ஆன் ஓதுவதற்கான ஒழுங்குகள் சிலதைக் கூறியுள்ளார்கள்.

- வுழுவின்றி அதனைத் தொடுவதையோ ஓதுவதையோ தவிர்த்தல்.
- ஓதுவதற்கு முன்னர் மிஸ்வாக் செய்து கொள்ளல்.
- நல்ல ஆடைகள் அணிந்திருத்தல்.
- கிப்லாவை முன்னோக்கியிருத்தல்.
- கொட்டாவி வரும்போது ஓதுவதை நிறுத்துதல்.
- அவசியமின்றி வேறு ஏதும் பேசுவதற்காக அல்குர்ஆன் ஓதுவதை நிறுத்துவதைத் தவிர்த்தல்.
- முழுச் சிந்தனையையும் அதில் செலுத்துதல்.
- இறை வாக்குகள் வரும் வசனங்களின் போது அதனை வேண்டுதல்.
- அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும் இடங்களின்போது அதனை விட்டும் பாதுகாப்புக் கோருதல்.
- குர்ஆனை விரித்த நிலையில் வைக்காதிருத்தல்.
- அதற்கு மேலால் எதனையும் வைக்காதிருத்தல்.
- அடுத்தவருக்கு இடைஞ்சலாக சப்தமிட்டு ஓதாதிருத்தல்.
- சந்தைகளிலும் சப்தம் நிறைந்த இடங்களிலும் ஓதாமல் இருத்தல்.

## அல்குர்ஆனை ஓதும் ஒழுங்கு

நபியவர்களின் ஓதல் பற்றி அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களிடம் வினவப்பட்டபோது, "அவர்கள் அழகாக நீட்டி ஓதுவார்கள். பிஸ்மில்லாஹி... என்பதை ஓதும்போது (உரிய முறையில்) பிஸ்மில்லாஹ்வையும் அர்ரஹ்மானையும் அர்ரஹீமையும் நீட்டுவார்கள்" எனக் கூறினார்கள்.

## ஓதுவதற்கான கூலி இரட்டிப்பாகுதல்

இறைவனுக்காக மனத்தூய்மையுடன் குர்ஆனை ஓதும் அனைவருக்கும் கூலி உண்டு. ஆனால் அவர் ஓதுவதை சிந்தித்து விளங்கி ஓதும்போது அதன் கூலி இரட்டிப்பாகின்றது. அப்போது ஒரு எழுத்துக்குப் பத்து மடங்கு முதல் எழு நூறு (10-700) வரை அதிகரிக்கிறது.

## ஒரு நாளில் ஓதும் அளவு

நபித்தோழர்கள் அவர்களுக்கென்று தினமும் ஓதுவதற்கு ஒரு அளவை வைத்திருந்தார்கள். ஏழு நாட்களை விடக் குறைவான நாட்களில் ஓதி முடிப்பதை எவரும் வழமையாக்கிக் கொள்வதில்லை. எனினும், மூன்று நாட்களுக்குக் குறைவான நாட்களில் ஓதி முடிப்பது கூடாது என நபிமொழியில் வந்துள்ளது.

எனவே அன்புக்குரிய சகோதர சகோதரிகளே தினமும் குர்ஆன் ஓதுவதில் எமது நேரத்தை செலவிடுவதற்கு ஆர்வம் கொள்வோம். எமக்கென ஒரு அளவை வைத்துக் கொள்வோம். அதனை எவ்வாறான நிலையிலும் விட்டுவிடாமல் இருப்போம். விட்டு விட்டுச் செய்யும் அமல்களை விட தொடராகச் செய்யும் சிறிய அமல் சிறந்ததாகும். தூக்கம் அல்லது மறதியால் விடுபட்டதை மறு நாள் ஈடு செய்து விடுவோம். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியுள்ளார்கள்:

"எவர் தனது வழமையான ஓதல்கள் அல்லது அதில் சிலதை செய்யாமல் உறங்கிவிட்டு மறுநாள் பஜ்ருக்கும் லுஹருக்குமிடையில் அதனை நிறைவு செய்து விடுகின்றாரோ அவர் அதனை இரவில் ஓதியதைப் போல் ஆகின்றார்." (முஸ்லிம்)

எனவே ரமழான் மாதத்தில் சங்கைமிக்க அல்குர்ஆனை ஓதி பன்மடங்கு நன்மைகளைப் பெற முயல்வோமாக!

றிப்னா முஹம்மத், ஓட்டமாவடி- 02

நபி (ஸல்லல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"ஆதமுடைய மகனின் ஒவ்வொரு செயலும் அவனுக்குரியதாகும்; நோன்பைத் தவிர. நிச்சயமாக, நோன்பு எனக்குரியது; அதற்கு நானே கூலி கொடுப்பேன் என்று அல்லாஹ் கூறியுள்ளான்." (அல்புகாரி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் ஒரு மாத பயிற்சிப் பாசறை



ஜே.எம். அஸீம்

கட்டம் கட்டமாக அல்லது படிப்படியாக செயற்படுவதை நோன்பு எமக்குப் போதிக்கிறது. கட்டம் கட்டமான செயற்பாடு வெற்றியை ஈட்டித் தரும். ரமழானின் முதல் நாளே நாம் முழுமையாக எம்மை மாற்றிக் கொள்கின்றோம். எமது உணவுப் பழக்கங்கள் மற்றும் நாம் மாற்ற முடியாது என்று நினைத்த பல விடயங்களை எம்மையறியாமல் மாற்றி விடுகின்றோம். அவ்வாறு மாற்றிய பின்னர் கட்டம் கட்டமாக நாம் அருள் (ரஹ்மத்), பாவமன்னிப்பு (மஃபிரத்), நரக விடுதலை (இத்கும் மினன் நார்) என்ற 3 கட்டங்களில் செயற்படுகிறோம்.

**நீங்கள்** சுற்றுலா சென்று பசுமையான, மனதிற்கினிய இடங்களைப் பார்த்து மகிழ்ந்திருப்பீர்கள். அவ்விடங்களில் கழித்த பொழுதுகள் உங்கள் வாழ்வில் இனிமையாய்ப் பதிந்திருக்கும். உங்கள் ஊரிலிருந்து வெளியே சென்று ஏதாவது பயிற்சிப் பாசறைகளில் கலந்து கொண்டு சில நாட்களைக் கழித்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறதா? இன்று சாதாரண பாடசாலைகள் முதல் உலகின் முன்னணி நிறுவனங்கள் வரை அனைத்தும் இத்தகைய பயிற்சிப் பாசறையை நடத்துகின்றன.

இத்தகைய பயிற்சிப் பாசறைகள் அதில் பங்குபற்றுபவர்களின் திறனை விருத்தி செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. இஸ்லாம் எமக்கு இதனை விட அருமையான வழிகாட்டல்களைத் தருகிறது. தினமும் ஐவேளைத் தொழுகை என்பது இத்தகைய வாழ்க்கைப் பயிற்சியே. அதேபோன்ற மற்றொரு பயிற்சிதான் வருடாந்தம் நாம் நோற்கும் ஒரு மாத கால நோன்பு.

இங்கு நாம் பயிற்சி என்று குறிப்பிடுவதை உடற்பயிற்சி என்று யாரும் தவறாக அர்த்தம் கொடுத்துவிடக் கூடாது. இவ்வாறு குறிப்பிடக் காரணம், மேலே சொன்ன உதாரணங்கள் பெரும்பாலும் மனிதனின் உடல், திறன் என்பவற்றை விருத்தி செய்வதை மாத்திரமே கவனத்திற் கொண்டுள்ளன. ஆனால், இஸ்லாம் எமக்கு அளிக்கும் பயிற்சி நாம் சிறந்த முறையில் வாழ்வதற்கான பயிற்சி; வாழ்வில் ஜெயிப்பதற்கான பயிற்சி; இவ்வுலகில் மட்டுமல்ல, மறுமையில் சுவனத்தை நோக்கிப் பயணிப்பதற்கான பயிற்சி. இதனால்தான் நோன்பாளிகளை ரைய்யான் என்ற வாசலினூடாக சுவனம் நுழையச் செய்வதாக அல்லாஹ் கூறுகின்றான்.


### நோன்பு எமது ஆளுமை விருத்திக்கான பயிற்சிக் களம்

ஒரு ரமழான் முடிந்ததிலிருந்து அடுத்த ரமழான் வரையுள்ள ஒரு வருட காலப் பகுதியில் எமது செயற்பாடுகளைத் திட்டமிட்டு சிறப்பாக அமைத்துக் கொள்ள நாம் மேற்கொள்ளும் ஒரு மாதப் பயிற்சிக் களமாக ரமழானைக் கருத முடியும். எம்மை ஆன்மிக ரீதியாக, அறிவு ரீதியாக, ஆற்றல் ரீதியாக மட்டுமன்றி, அனைத்து விதத்திலும் எம்மை வளப்படுத்திக் கொள்ள சிறந்த பயிற்சிக் களமே நோன்பாகும்.

### நோன்பு என்பது புதிய சூழல்

சூழல் என்றால் 'எம்மைச் சுற்றியுள்ள பகுதி' என இலகுவாக வரைவிலக்கணப்படுத்தலாம். ஆனால், பிரதேச ரீதியாக வரையறுத்த காரணிகளால் மட்டும் கட்டமையாத பல சூழல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



> “பத்ர் களம் எமக்கு நன்றாக நினைவிருக்கும். நோன்பு என்றால் பசித்தி ருப்பதும் ஆன்மிக ரீதியான வணக்க வழிபாடுகள் செய்வதுமே என்று நாம் நினைத்திருக்கலாம். ஆனால் நோன்பில் தான் நபியவர்களும் ஸஹாபிகளும் பத்ர் களத்தில் போராடினார்கள். இவ்வாறு நோன்பு என்றால் பசித்திருப்பதும் ஓய்வெடுப்பதும் என்ற எமது மனப்பாங்கை மாற்றியமைக்க வேண்டும். இத்தகைய மனப்பாங்கால் எமது இயல்புகளாக ஊறிப்போன இத்தகைய சிந்தனைகளை களைய வேண்டும். அது ஒரு போராட்டக் களம். உள்ளத்தோடு போராடுவது மட்டுமல்ல, உடலாலும் போராட வேண்டிய களமே நோன்பாகும்.”

இருக்கின்றன. கல்விச் சூழல், பொருளாதார சூழல், சமூக சூழல் போன்றவை எமக்குப் புதியவையல்ல. அதே போன்ற மற்றுமொரு சூழல்தான் நோன்பு. ஆனால் அது அருமையான சூழல்; ஆன்மிக சூழல்; அமைதியான சூழல்; உகந்த சூழல். இந்த நோன்பு என்ற சூழலில் நாம் புதிதாய் வாழப் பழகுவோம். கல்விச் சூழலில் வளரும் பிள்ளைகள் நன்றாகக் கற்பது போல இந்த ரமழானின் சூழலில் நாம் எம்மை பக்குவப்படுத்தி வாழக் கற்றுக் கொள்வோம்.

### முன்னாயத்தம்

ஷஃபான் மாதத்தை நபியவர்கள் ரமழானுக் குத் தயார்படுத்தும் விதமாகப் பயன்படுத்தியிருக் கிறார்கள். நபியவர்கள் ஷஃபானிலே அதிகமதிகம் நோன்பு நோற்று ரமழானுக்கு தன்னைத் தயார் படுத்திக் கொள்ள கற்றுத் தந்துள்ளார்கள். ரமழா னுக்கான இத்தகைய தயார்படுத்தலை நபியவர் கள் ஒவ்வொரு வருடமும் ஷஃபானிலே மேற் கொண்டார்கள். அன்னார் ரமழானுக்காக மாத்தி ரமன்றி அவர்களது வாழ்வின் பல்வேறு நிகழ்வுக ளுக்காகவும் தன்னை தயார்படுத்தினார்கள். இந்த வகையில் ஹிஜ்ரத், யுத்தங்கள் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

### நோன்பு ஒரு பயிற்சிப் பாசறை

நோன்பு எமது செயற்பாடுகளை கட்டமைப் பதற்கான பயிற்சிப் பாசறையாகும். எமது வாழ்வை குறித்த ஒழுங்கில் அமைத்துக் கொள்வதற்கான பயிற்சிக் களமாகும். கட்டுப்பாடாகவும் நல்லொ ழுக்கமாகவும் வாழ்வதற்கான ஆரோக்கியக் களமாகும். உள்ளத்தைக் கட்டுப்படுத்தி வெல்வ தற்கான களமாகும்.

*1. நோன்பு ஆன்மிகப் பயிற்சிக் களம்*

நோன்பின் நோக்கமே எம்மை இறையச்ச முள்ளவர்களாக மாற்றுவதாகும்.

*“விசுவாசிகளே! உங்களுக்கு முன் இருந்த வர்களுக்கு விதியாக்கப்பட்டது போலவே உங்களுக்கும் நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நீங்கள் தக்வா உள்ளவர்களாக மாற வேண்டும் என்பதற்காக...” (2:183)*

இந்த வகையில் ரமழான் எமது உள்ளத்தைப் பரிபக்குவப்படுத்தி, உளக் கட்டுப்பாட்டோடு வாழ்வதற்கு ஈமானியப் பயிற்சியை வழங்குகிறது. இந்த ஆன்மிகப் பயிற்சியே எம்மை சிறந்த முறையில் ஈடேற்றமடையச் செய்யும். இன்று உள்ளத்தைக் கட்டுப்படுத்தி வாழ்வதற்கு பல் வேறு உளவியல் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மனிதர்கள் உள நோய்களுக்குத் தீர்வு தேடி அலை கிறார்கள். இத்தகைய உளவியல் பிரச்சினைக ளுக்கு இஸ்லாம் ஆன்மிகத் தீர்வுகளை அழகாக முன்வைக்கிறது. ஆகவே இம் மாதத்தில் நாம் பகல் முழுக்க நோன்பிருந்து இரவு முழுக்க நின்று வணங்கும் ஆன்மிக விருத்திக்காக இதனைப் பயன்படுத்தி பயன்பெறுவோம்.

*2. நோன்பு அறிவுப் பயிற்சிக் களம்*

ரமழான் அறிவுக்கான பயிற்சிக் களமாகவும் விளங்குகிறது. குறிப்பாக அல்குர்ஆனைக் கற் பதற்கு ரமழானைப் பயன்படுத்தினால் மிகப் பயனுள்ளதாக அமையும். அல்குர்ஆன் இறங்கிய மாதமான அதனை அம்மாதத்தில் கண்ணியப்ப டுத்துவதாகவும் அது அமையும். எமது முன்னைய இமாம்கள் அல்குர்ஆனை ஓதுவதற்கும் கற்பதற் கும் இம்மாதத்தை விஷேடமாகப் பயன்படுத்தி னார்கள். அதேபோல் நாமும் அல்குர்ஆனைக் கற்பதற்கும் ஏனைய விடயங்களைக் கற்பதற்கும் இம்மாதத்தைப் பயன்படுத்த முயல்வோம்.

*3. நோன்பு ஆரோக்கியப் பயிற்சிக் களம்*

உணவருந்தியும் பானமருந்தியும் பழக்கப்பட் டுப் போன எமது உடலுக்கு உணவில் ஒரு கட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுப்பாட்டை மேற்கொள்ள ரமழான் பயிற்சிய ளிக்கிறது. உணவுக் கட்டுப்பாடே பல நோய்க ளுக்குத் தீர்வாக அமைகிறது. உணவருந்தாமல் பல மணி நேரங்களைக் கழிப்பதால் உடல் ஓய்வு பெற்று ஆரோக்கியமாக மாறுகிறது. இது மட்டுமல்லாமல் நோன்பினால் ஏராளமான மருத்துவப் பயன்கள் இருப்பதாக பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

4. நோன்பு ஆளுமைப் பயிற்சிக் களம்

பத்ர் களம் எமக்கு நன்றாக நினைவிருக்கும். நோன்பு என்றால் பசித்திருப்பதும் ஆன்மிக ரீதியான வணக்க வழிபாடுகள் செய்வதுமே என்று நாம் நினைத்திருக்கலாம். ஆனால் நோன்பில் தான் நபியவர்களும் ஸஹாபிகளும் பத்ர் களத்தில் போராடினார்கள். இவ்வாறு நோன்பு என்றால் பசித்திருப்பதும் ஓய்வெடுப்பதும் என்ற எமது மனப்பாங்கை மாற்றியமைக்க வேண்டும். இத்தகைய மனப்பாங்கால் எமது இயல்புகளாக ஊறிப் போன இத்தகைய சிந்தனைகளை களைய வேண்டும். அது ஒரு போராட்டக் களம். உள்ளத்தோடு போராடுவது மட்டுமல்ல, உடலாலும் போராட வேண்டிய களமே நோன்பாகும்.

5. நோன்பு கட்டுப்பாடான பயிற்சிக் களம்

நோன்பில் எமது வாழ்க்கை குறித்த ஒரு ஒழுங்கிற்குள் வருகின்றன. தஹஜ்ஜுத் உடைய நேரத்தில் எழுந்து தொழுது, ஸஹர் செய்கிறோம். பகல் முழுவதும் நோன்பிருக்கிறோம். மஃரிபுக்கு நோன்பு துறக்கிறோம். இரவு முழுக்க வணக்க வழிபாடுகளில் மூழ்கி விடுகிறோம். இத்தகைய ஒரு பயிற்சி எமக்கு எமது வாழ்வை நாம் குறித்த ஒழுங்கில் கட்டமைக்க உதவுகிறது. எமது வாழ்வை கட்டுப்பாடாக கட்டமைக்கிறது. மனோ இச்சையைத் துறந்து வாழ எம்மைப் பயிற்றுவிக்கிறது.

6. நோன்பு திட்டமிடுவதற்கான பயிற்சிக் களம்

நோன்பைப் பயனுள்ளதாகக் கழிப்பதற்கான நேர அட்டவணைகளைக் கண்டிருப்போம். ரமழான் மாதத்திற்கான திட்டமிடல்களை அறிந்திருப்போம். இந்தவகையில் எமது வாழ்வை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான பயிற்சிக் களம் நோன்பாகும். அம் மாதத்தை நாம் திட்டமிட்டு செயற்படுத்தினால் அந்த ஒரு மாத காலப் பயிற்சி எமக்கு வாழ்நாள் முழுவதையும் திட்டமிட்டு செயற்படுத்த உதவும். திட்டமிட்டு கட்டம் கட்டமாக எமது செயற்பாடுகளை அமைத்து முன்னேற இப்பயிற்சி எமக்கு உதவுகிறது.

### நோன்பும் கட்டம் கட்டமான நகர்வும்

கட்டம் கட்டமாக அல்லது படிப்படியாக செயற்படுவதை நோன்பு எமக்குப் போதிக்கிறது. கட்டம் கட்டமான செயற்பாடு வெற்றியை ஈட்டித் தரும். ரமழானின் முதல் நாளே நாம் முழுமையாக எம்மை மாற்றிக் கொள்கின்றோம். எமது உணவுப் பழக்கங்கள் மற்றும் நாம் மாற்ற முடியாது என்று நினைத்த பல விடயங்களை எம்மையறியாமல் மாற்றி விடுகின்றோம். அவ்வாறு மாற்றிய பின்னர் கட்டம் கட்டமாக நாம் அருள் (ரஹ்மத்), பாவமன்னிப்பு (மஃபிரத்), நரக விடுதலை (இத்இம் மினன்நார்) என்ற 3 கட்டங்களில் செயற்படுகிறோம்.

முதல் பத்து நோன்புகளும் ரஹ்மத்தைப் பெறுவதற்கான கட்டமாகவும் இரண்டாவது பத்து நோன்புகளும் மஃபிரத்தை அடைவதற்கான கட்டமாகவும் இறுதிக்கட்டம் நரக விடுதலை பெறும் கட்டமாகவும் நோன்பு கட்டமைக்கப் பட்டுள்ளது. இதற்கான நிறைவான கூலி பெருநாள் தினத்தில் வழங்கப்படுவதால் அந்த சந்தோஷ நிகழ்வைக் கொண்டாடுகிறோம்.

இத்தகைய பயிற்சிகளை நோன்பு எமக்குக் கற்றுத் தருகிறது. ரமழான் முடிந்த பின்னரும் நாம் இத்தகைய பயிற்சிகளிலிருந்து படிப்பினைகளைப் பெற்று எமது வாழ்வை வளமாக்கிக் கொள்ள பழக வேண்டும். நோன்பு எனும் ஈமானியப் பாசறையில் நாம் வாழ்வதற்கு அருமையான சந்தர்ப்பம் எம்முன் காத்துக் கிடக்கிறது. அப் பாசறையில் எம்மைப் புடம்போட்டு வார்த்தெடுக்க முயற்சி செய்வோமாக!

நபி (ஸல்லல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்: “யார் பொய்யான வார்த்தைகளையும் ஜாஹிலிய்யத்தான செயல்களையும் விட்டுவிடவில்லையோ அவர் உண்பதையும் பருகுவதையும் மட்டும் விடுவதில் அல்லாஹ்வுக்கு எந்தத் தேவையும் இல்லை.” (அல்புகாரி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞானம்

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

ஆசிரியர்: ஹாஜிமா ஜெஸீமா ஆதம் லெவ்வை (Bsc, C.P.O retired)
தேசிய கல்வி நிறுவகம்

**தரம்: 10**

## உயிரியல்

தேர்ச்சி: 4.0

தேர்ச்சி மட்டம் 4.1

- உடலினுள் பொருட்களைக் கடத்தும் பணி குருதிச் சுற்றோட்டத் தொகுதி மூலமாக நடைபெறுகின்றது.
- இதயம் குருதிச் சுற்றோட்டச் செயற்பாட்டின் மையம் ஆகும்.
- குருதி இதயத்திலிருந்து வெளியேறும்போது நாடிகள் ஊடாகவும் இதயத்தை நோக்கிப் பாயும்போது நாளங்களினூடாகவும் பாய்கின்றது.
- பின்னர், வலது சோணை அறையிலிருந்து முக்கூர் வால்வினூடாக வலது இதயவறையினுள் புகுகின்றது. அங்கிருந்து நுரையீரல் நாடியினூடாக நுரையீரல்களை அடைகின்றது.
- நுரையீரல்களில் ஒட்சிசன் ஏற்றப்பட்ட பின்னர் நான்கு நுரையீரல் நாளங்களினூடாக இடது சோணையறைக்குள் செல்கிறது.
- இருகூர் வால்வினூடாக இடது இதயவறையை வந்தடைந்து பெருநாடியினூடாக உடலெங்கும் விநியோகிக்கப்படுகின்றது.
- இரட்டைக் குருதிச் சுற்றோட்டம் எனப்படுவது, உடலின் ஊடாக குருதி ஒருமுறை பயணஞ் செய்யும்போது, இதயத்தினூடாகக் குருதி இருமுறை பயணம் செய்வதே ஆகும்.
- இதயவறைச் சுவர் உயர் குருதி அமுக்கத்திற்கு ஈடுகொடுக்க வேண்டியுள்ளதால், அவை சோணையறையிலும் பார்க்க அதிக தடிப்புடையன. இடது இதயவறைச் சுவர் அதிகம் தடிப்பானது.
- நாடிகளினுள் உள்ள குருதி அமுக்கம், நாளங்களின் குருதி அமுக்கத்திலும் கூடியதாகும்.
- இதயத்திலுள்ள எல்லா வால்வுகளும் குறித்த திசையில் குருதி பாயும்போது மட்டுமே திறப்பவையாகும்.
- வால்வுகளின் தொழிற்பாட்டிற்கு இதய நாண்கள் உதவுகின்றன.

**சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் கூறுங்கள்.**

1. குருதியில் குருதித் திரவவிழையமும் குருதிக் கலங்களும் உண்டு. ( )
2. எல்லா சிறு துணிக்கைகளும் என்பு மச்சைகளினுள் உருவாக்கப்படுகின்றன. ( )
3. குருதித் திரவவிழையம் $HCO_3^-$ அயன்களாக $Co_2$ ஐக் கடத்துகின்றன. ( )
4. இருகுழிய வடிவமான, கருக்களற்ற கலங்கள் செங்குருதித் துணிக்கைகள் ஆகும். ( )
5. அதிலுள்ள செந்நிறமான ஈமோகுளோபினில் இரும்பு உண்டு. ( )
6. செங்குருதித் துணிக்கை 4 மாத காலமே உயிர் வாழும். ( )
7. கருக்கள் கொண்ட பெரிய கலங்கள் வெண்குருதிச் சிறு துணிக்கைகள் ஆகும். ( )
8. மூல நாடி, இயோசின் நாடி, நடுநிலை நாடி என்பன சிறுமணி கொண்ட வெண்குருதிச் சிறுதுணிக்கைகளாகும். ( )
9. சிறுமணி அற்ற வெண்குருதிச் சிறுதுணிக்கைகள் நிணநீர் கலங்கள், மொனோசைற்று என்பவை ஆகும். ( )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. குருதி உறையும் செயற்பாட்டை ஆரம்பிப்பன சிறுதட்டுக்கள் ஆகும். ( )

### கட்டமைப்பு வினாக்கள்

i. குருதித் திரவவிழையத்தின் 6 கூறுகளை எழுதுங்கள்.

ii. குருதியின் பிரதான கூறுகளின் சதவீதத்தைக் குறிப்பிடுங்கள்.


iii. செங்குருதிக் கலத்தினதும் வெண்குருதிக் கலத்தினதும் அமைப்பைக் காட்டும் படம் வரையுங்கள்.

iv. வெண்குருதிக் கலத்தின் ஆயுட்காலம் யாது?

v. குருதி உறைதலுக்கு அவசியமான காரணிகள் யாவை?

மனித இதயத்தின் நெடுக்கு வெட்டுமுகம் படத்தில் காட்டப்பட்டுள்ளது.

;




a) இங்கு A,B,C,D, என்னும் பகுதிகள் யாவை?

b) E யின் தொழிற்பாடு யாது?

c) Gக்கும் Bக்குமிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை எழுதுங்கள்.

d) Hஇனால் ஆற்றப்படுகின்ற பணி யாது?

ii. இதயத்துடிப்பு "லப்-டப்" எனக் கேட்பதற்கான காரணம் யாது?

iii. குருதிச் சோகை எனும் நோய்நிலைமை ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் இரு காரணிகளை எழுதுங்கள்.

iv. செங்குருதிக் கலம், வெண்குருதி க்கலத்திலிருந்து வேறுபடுகின்ற இரு இயல்புகளை எழுதுங்கள்.

v. இரட்டைக் குருதிச் சுற்றோட்டம் எனப்படுவது யாது?

**"நோன்பு உள்ளத்திற்கான ஸகாத்; உடலுக்கான பயிற்சி; நன்மைக்கான தூண்டுகோல். தனி மனிதனுக்கான பாதுகாப்புக் கேடயம்; சமூகத்திற்கான அரண்.**


**உடம்பில் பசியிருக்க உள்ளம் ஒளிபெறும். ஆற்றல்கள் கூர்மையடையும். பார்வை தீட்சண்யமாகும். ஆனால் வயிறு முட்ட உண்பது உள்ளத்தை குருடாக்கி விடும். அறியாமையை வளரச் செய்யும். மூளையில் சமிபாட்டு உஷ்ணம் அதிகரிக்க அது பலவீனம் அடைய மடமை உருவாகும். சிறுவன் அதிகம் உண்பதால் அவனால் அதிக மனனம் செய்ய முடியாது; படிப்பதும் ஏறாது.**

**எனவே குறைவாக சிரித்து, குறைவாக உணவருந்தி உங்களது உள்ளத்தை உயிர்ப்பியுங்கள். பசியில் இருந்து அதனைப் பளிங்காக பளபளக்கச் செய்யுங்கள்."**

**இமாம் கஸ்ஸாலி (ரஹிமஹுல்லாஹ்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது செய்திப் பத்திரிகை



New England News 462

Numb. 1.

PUBLICK
OCCURRENCES
Both FORREIGN and DOMESTICK.

*Boston*, Thursday *Sept.* 25*th.* 1690.

*IT is designed, that the Countrey shall be furnished once a moneth ( or if any Glut of* Occurrences *happen,* oftener, ) *with an Account of such considerable things as have arrived unto our Notice.*

*In order hereunto, the Publisher will take what pains he can to obtain a* Faithful Relation *of all such things ; and will particularly make himself beholden to such Persons in* Boston *whom he knows to have been for their own use the diligent Observers of such matters.*

*That which is herein proposed, is,* First, *That* Memorable Occurrents *of* Divine Providence *may not be neglected or forgotten, as they too often are.* Secondly, *That people every where may better understand the Circumstances of Publique Affairs, both abroad and at home ; which may not only direct their* Thoughts *at all times, but at some times also to assist their* Businesses *and* Negotiations.

Thirdly, *That some thing may be done towards the* Curing, *or at least the* Charming *of that* Spirit of Lying, *which prevails amongst us, wherefore nothing shall be entered, but what we have reason to believe is true, repairing to the best fountains for our Information. And when there appears any* material mistake *in any thing that is collected, it shall be* corrected *in the* next.

*Moreover, the Publisher of these* Occurrences *is willing to engage, that whereas, there are many* False Reports, *maliciously made, and spread among us, if any well-minded person will be at the pains to trace any such* false Report *so far as to find out and Convict the* First Raiser *of it, he will in this Paper ( unless just Advice be given to the contrary ) expose the Name of such person, as* A malicious Raiser of a false Report. *It is suppos'd that none will dislike this Proposal, but such as intend to be guilty of so villanous a Crime.*

THE Christianized *Indians* in some parts of *Plimouth*, have newly appointed a day of Thanksgiving to God for his Mercy in supplying their extream and pinching Necessities under their late want of Corn, & for His giving them now a prospect of a very *Comfortable Harvest*. Their Example may be worth Mentioning.

'Tis observed by the Husbandmen, that altho' the With-draw of so great a strength from them, as what is in the Forces lately gone for *Canada*; made them think it almost impossible for them to get well through the Affairs of their Husbandry at this time of the year, yet the Season has been so unusually favourable that they scarce find any want of the many hundreds of hands, that are gone from them ; which is looked upon as a Merciful Providence

While the barbarous *Indians* were lurking about *Chelmsford*, there were missing about the beginning of this month a couple of Children belonging to a man of that Town, one of them aged about eleven, the other aged about nine years, both of them supposed to be fallen into the hands of the *Indians*.

A very *Tragical Accident* happened at *Water-Town*, the beginning of this Month, an *Old man*, that was of somewhat a Silent and Morose Temper, but one that had long Enjoyed the reputation of a *Sober* and a *Pious Man*, having newly buried his Wife, The Devil took advantage of the Melancholy which he thereupon fell into, his Wives discretion and industry had long been the support of his Family, and he seemed hurried with an impertinent fear that he should now come to want before he dyed, though he had very careful friends to look after him who kept a strict eye upon him, least he should do himself any harm. But one evening escaping from them into the Cow-house, they there quickly followed him found him *hanging by a Rope*, which they had used to tye their *Calves* withal, he was dead with his feet near touching the Ground.

Epidemical *Fevers* and *Agues* grow very common, in some parts of the Country, whereof, tho' many dye not, yet they are sorely unfitted for their imployments ; but in some parts a more *malignant Fever* seems to prevail in such sort that it usually goes thro' a Family where it comes, and proves *Mortal* unto many.

The *Small-pox* which has been raging in *Boston*, after a manner very Extraordinary is now very much abated. It is thought that far more have been sick of it then were visited with it, when it raged so much twelve years ago, nevertheless it has not been so Mortal, The number of them that have

**உலகில்** முதலாவது செய்திப் பத்திரிகையை இன்றுள்ள பத்திரிகைகளுடன் ஒப்பிடுவது கடினம். அவை செய்திகளை உள்ளடக்கிய கடிதங்களாகவே இருந்தன. கி.மு 5ஆம் நூற்றாண்டில் உரோமர்கள் செய்திகளை எழுதி தலைநகருக்கு வெளியேயுள்ள மக்களுக்கு அனுப்பி வைத்தனர். இன்றைய பத்திரிகைக்கு ஓரளவுக் கேனும் நெருக்கமான அமைப்பில் பத்திரிகை வெளியிடப்பட்டது கி.மு 60ஆம் ஆண்டுகளில் ஜூலியஸ் ஸீஸரின் ஆட்சிக் காலத்திலாகும்.

அரசாங்க அறிவித்தல்களுடன் கூடிய செய்திகள் எழுதப்பட்டு, சுவர்களில் ஒட்டப்பட்டன. அது சுவரொட்டிப் பத்திரிகை போன்றிருந்தது. இது உரோம மொழியில் அக்டா டியுமா (Acta Diuma) என்றழைக்கப் பட்டது. இதன் கருத்து 'அன்றாட நிகழ்வுகள்' என்பதாகும்.

வியாபார நடவடிக்கைகளுக் காகவும் உடனுக்குடன் செய்திக ளைத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை அவர்களுக்கு இருந் தது. இதற்கமைய முதலாவது பத்திரிகை அமைப்பிலான கடிதம் சர்வதேச வங்கியாளர்களாகக் கருதப்பட்ட ஜேர்மனியைச் சேர்ந்த புக்கர் (Fugar) குடும்பத்தினரால் வெளியிடப்பட்டது. அதே சமகாலத்தில் வெனிஸ் மக்கள் ஒரு 'கஸட்டா' செலவில் பத்திரிகை வாங்கிப் பார்க்கும் சந்தர்ப்பத்தைப் பெற்றனர். அன்றைய பத்திரிகை 'நொட்டீஸ் ஸ்டேட்' (Notice State) என்றழைக்கப்பட்டது. இதன் கருத்து 'எழுத்து மூலம் அறிவித்தல்' என்பதாகும்.

முதலாவது பிரித்தானியப் பத்திரிகை லண்டனிலிருந்து வெளியிடப்பட்டது. அது 'இண்டலிஜன்ஸர்' (Intelligentcer) என்ற பெயரால் வெளிவந்தது. ஆரம்ப காலப் பத்திரிகைகள் அநேகமாக தினமன்றி வாரமொரு முறையே வெளியிடப் பட்டன. இதற்கான காரணம் பத்திரிகைத்தாள் பெறுவதில் இருந்த சிரமம், அச்சு இயந்திரமின்மை, விநியோக்கும் சிரமம் என்பனவேயாகும்.

முதலாவது அமெரிக்கப் பத்திரிகை 1690இல் Publick Occurrences- என்ற பெயரில் பொஸ்டனில் இருந்து வெளியிடப்பட்டது. ஆனால் குடியேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுநர் அதனை உடனடியாக தடைசெய்தார். பென்ஜமின் பிராங்ளின் 1729இல் ஆரம்பித்த 'பென்ஸில் வேனியா கஸட்றா' என்ற பத்திரிகை 1765 வரை வெளியிடப்பட்டது. அமெரிக்க சுதந்திரப் போரின்போது அங்கு 37 பத்திரிகைகள் இருந்தன.

பத்திரிகை உலகின் பிரமாண்டமான இடத்தை வகிக்கும் லண்டனில் The Times பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது 1785ஆம் ஆண்டாகும்.

இலங்கையில் பத்திரிகை பற்றிய ஒரு சுவையான தகவல். 1939-40 களில் வெளியான 'துப்பத' அதாவது ஏழை என்ற சிங்கள மொழிப் பத்திரிகை கொழும்பு புதுக்கடை 'சாஞ்சி ஆரச்சி வத்த' என்ற இடத்திலிருந்து வெளியிடப்பட்டது. அதன் விலை என்ன தெரியுமா? ஒரே ஒரு சதம்தான்!

இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியில் 1736ஆம் ஆண்டு அச்சு இயந்திரம் அறிமுகப் படுத்தப்பட்டதோடு அச்சுக்கலையில் புதிய பரிணாம வளர்ச்சி ஆரம்பமாகியது. அதுதான் பிற்காலத்தில் இந்நாட்டில் முறையான அச்சு ஊடகத்துறையின் வளர்ச்சிக்கு கைகொடுக்கலாயிற்று.

1802ஆம் ஆண்டு பிரித்தானியர் ஆட்சியில் இலங்கையின் முதலாவது பத்திரிகையாக அரசாங்க வர்த்தமானி வெளியிடப்பட்டது. இந்த வர்த்தமானி தமிழ் மொழியிலும் அச்சிடப்பட்டது. அரசாங்கம் அவ்வப்போது இலங்கை மக்களுக்கு விடுத்த அறிவித்தல்கள் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தன. தமிழ் பேசும் உலகில் வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகையாகவும் இந்த அரசாங்க வர்த்தமானியே உலக வரலாற்றில் இடம் பிடித்திருக்கின்றது.

இலங்கையில் வெளியாகிய முதலாவது பத்திரிகை ஆங்கிலப் பத்திரிகையாகும். இங்கு பிரித்தானியர் ஆட்சி நிலவியபோது 1802ஆம் ஆண்டு ஆங்கில மொழியில் வெளியிடப்பட்ட அரசாங்க வாத்தமானி 'த சிலோன் கவர்மன்ட் கெசட்' (The Ceylon Government Gazette) இலங்கையின் பத்திரிகைத் துறையின் வரலாற்றில் முதல் பத்திரிகையாக இடம்பிடித்திருக்கின்றது. இந்த அரசாங்க வர்த்தமானியின் தமிழ் மொழிபெயர்ப்பு 1802 மார்ச் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது. அரசாங்க வர்த்தமானி என்ற பெயரில் இது வெளியிடப்பட்டது.

இலங்கையின் தமிழ்ப் பத்திரிகைத்துறை வரலாற்றில் முதல் தமிழ்ப் பத்திரிகையாக இந்த அரசாங்க வர்த்தமானி அமைகின்றது. இது இலங்கையில் மாத்திரமன்றி தமிழ்பேசும் உலகில் வெளியாகிய முதலாவது தமிழ்ப் பத்திரிகையாக வரலாற்றில் பதிவாகியிருக்கின்றது. அதுவரைக்கும் இந்தியாவில்கூட ஒரு தமிழ்ப் பத்திரிகை வெளிவந்திருக்கவில்லை.

### முஸ்லிம்களின் முதலாவது பத்திரிகை

1869 இல் 'ஆலமாத் லங்காபுரி' என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. அரபுப் பெயரில் வெளியிடப்பட்ட இப்பெயரின் பொருள் இலங்கைச் செய்தி என்பதாகும். இந்நாட்டு முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட முதல் பத்திரிகையாக 'ஆலமாத் லங்காபுரி' வரலாற்றில் பதிவாகியிருக்கின்றது. இப்பத்திரிகையில் அரபு மொழி பிரயோகிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

1882ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'முஸ்லிம் நேசன்' என்ற பத்திரிகையே முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட முதல் முஸ்லிம் பத்திரிகை என்ற கருத்தும் காணப்படுகின்றது. பதிவுகளின் அடிப்படையில் முதலாவதாக வெளியிடப்பட்ட முஸ்லிம் பத்திரிகையாக 'ஆலமாத் லங்காபுரி' என்ற பத்திரிகையே கருதப்பட வேண்டும்.

1870 இல் 'புதினாதிபதி' என்ற பெயரில் பத்திரிகையொன்று வெளியிடப்பட்டிருக்கின்றது. தமிழில் புதினம் அல்லது புதுமை என்றால் செய்தி என்பது அர்த்தமாகும். இதே காலப்பகுதியில் 'சர்வஜன மனோரஞ்சனி' என்றும் பத்திரிகையொன்று வெளிவந்திருக்கின்றது.

1877 இல் 'புதினாலங்காரி' என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. அளவில் மிகவும் சிறியதாக இருந்ததால் அதனை பத்திரிகை என்பதைவிட சஞ்சிகை என்பதே மிகவும் பொருத்தமானதாகும். முஸ்லிம்களால் வெளியிடப்பட்ட முதல் இஸ்லாமிய சஞ்சிகை என்ற பெருமை இதற்கு வழங்கப்படுகின்றது.

1882 இல் முஸ்லிம் நேசன், 1883 இல் ஞான தீபம், 1889 இல் கஷ்பிரான் அல்குல்பில்ஜான், 1890 இல் சைபுல் இஸ்லாம், 1895 இல் இஸ்லாம் மித்திரன் ஆகிய பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. இவை முஸ்லிம் கல்விமான்களால் வெளியிடப்பட்ட பத்திரிகைகளாகும்.

1892 இல் 'இலங்கை புதினத்தாள்' என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. புதினத்தாள் என்பதும் செய்தித்தாள் என்ற அர்த்தமாகும். இந்த வரிசையில் முஸ்லிம் பாதுகாவலன் என்ற பத்திரிகையும் குறிப்பிடத்தக்கதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் கற்றலில் ஞாபகமும் மறதியும்- 02

ஹனீபா ஏ. வஹாப் (இஸ்லாஹி)

**ஞாபகம்** என்பது பொதுவாக அனைவருக்கும், குறிப்பாக மாணவர்களுக்கு மிக முக்கியமானது. பொதுவாழ்க்கையில் நண்பர்கள், உறவினர்கள் மற்றும் முக்கியமான பிரமுகர்களின் பெயர், தொலைபேசி இலக்கம் இன்னும் தேவையான தகவல்களை நினைவில் வைத்திருக்க ஞாபகம் அவசியம். குறிப்பாக மாணவர்களாகிய உங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் கல்வி வாழ்க்கையில் எதிர்நோக்குகின்ற எத்தனையோ பரீட்சைகளுக் குத் தயங்காமல் முகங்கொடுத்து அவற்றில் வெற்றிபெற ஞாபகம் இன்றியமையாததாகும்.

ஞாபகம் என்றால் என்ன, அது எவ்வாறு உருவாகிறது, ஞாபகத்தின் செயன்முறை மற்றும் அதன் வகைகள் யாவை, நாம் ஒரு தகவலை மறக் காமல் பதிந்து வைத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும் என்பன தொடர்பாக கடந்த இதழில் பார்த்தோம். நீங்கள் நாளாந்தம் படிக்கின்ற விட யங்கள் மறந்துபோவதற்கு முன்னால் அவற்றை நீண்ட கால ஞாபகத்தில் சேமித்துவைக்க என்ன செய்யலாம் என்பது தொடர்பாக இக்கட்டுரை யில் காண்போம்.

கல்விக் கடலில் அறிவுத் தாகம் தீர்க்க களமி றங்கி, களைப்படையாமல் கால் நகர்த்தும் மாண வர்களே! கற்றல் என்பது ஒரு கலை. அதில் புதுமை களும் இனிமைகளும் கொட்டிக் கிடக்கின்றன. கற்றலை இலகுபடுத்தவும் கற்கின்ற விடயங்களை நீண்டகால ஞாபகத்தில் சேமிக்கவும் எத்தனையோ யுக்திகளும் வழிமுறைகளும் நாளுக்கு நாள் முன் வைக்கப்பட்டு வருகின்றன. வேட்கை, வேகம் மற் றும் விவேகத்துடன் தேடிப் படிக்கின்ற மாணவர் களுக்கு கற்றல் என்பது கற்கண்டு சாப்பிடுவது போன்றதாகும். கற்கண்டு கடிப்பதற்கு கடினமா யினும் அதன் சுவை இனிமையானது.


### ஞாபக சக்தியை மேம்படுத்துவதற்கான சில உத்திகள்

ஞாபக சக்தியை மேம்படுத்துவதற்குப் பல உத்திகள் கையாளப்படுகின்றன. பின்வரும் எட்டு அம்சங்களும் அவற்றுள் முக்கியமானவையாகும்.

1. Flow Chart
2. Mind Mapping
3. Bookmark
4. Mnemonic
5. Doodles
6. Time Line
7. Brainstorm
8. Walk and Talk

### 1. Flow Chart

'பாய்ச்சற் கோட்டு நிரல் படம்' என இத னைத் தமிழில் அழைப்பர். படிக்கின்ற ஒரு விட யத்தை மனனம் செய்து சொற்களாக மாத்திரம் நீண்ட கால ஞாபகத்திற்கு அனுப்புவதைவிட, குறியீடுகளாகவும் காட்சி அமைப்பிலும் உட் செலுத்தினால் ஞாபகத்தில் சேமிக்கப்படும் வீதம் அதிகரிக்கிறது.





பந்தி அமைப்பில் நீங்கள் படிக்கின்ற விட யங்களை குறியீடுகளாகவும் வரைபடமாகவும் காட்சிப்படுத்துவதற்கு Flow Chart துணை செய்கிறது.

உதாரணமாக, சமிபாட்டுத் தொகுதியில் உணவு சமிபாடடைந்து அது சக்தியாக மாறும் செயன்முறை பெரிய பந்திகளில் விளக்கப்பட்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருக்கும். இச்செயன்முறையை இலகுவாக ஞாபகத்தில் வைக்க Flow Chart ஐப் பயன்படுத்தலாம்.


## 2. Mind Mapping




இதனை 'மன வரைபடம்' எனத் தமிழில் அழைப்பர். Flow Chart ஐப் போல், பெரும் பந்திகளில் உள்ள விடயங்களை உருவகப்படுத்தி நீண்டகால ஞாபகத்தில் சேமித்து வைக்க இது உதவியாக அமைகிறது. உதாரணமாக நீங்கள் விஞ்ஞானப் பாடத்தில் தாவர இனப்பெருக்கம் என்ற தலைப்பில் தாவர ஒட்டுக்கள் பற்றிப் படித்திருப்பீர்கள் அல்லது படிக்க இருப்பீர்கள். இத் தலைப்பில் தாவரங்களை ஒட்டும் பல முறைகள் விளக்கப்படுகின்றன. அவற்றை படம்: 2இல் காட்டப்பட்டுள்ளவாறு Mind Mapping ஒன்றைத் தயாரிக்கலாம். இதுபோல் பெரும் பந்திகளில் செல்லப்பட்ட விடயங்களை நன்றாக வாசித்து அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய தகவல்களை மாத்திரம் இவ்வாறு வரைபடத்தில் இடுவதன் மூலம் கற்றலையும் இலகுபடுத்தி நீண்ட ஞாபகத்தில் பதியும் வீதத்தையும் அதிகரிக்கச் செய்யலாம்.

## 3. Bookmark

குறிப்பிட்ட ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பப் பார்க்கும்போதும் மீட்டும் போதும் அது நீண்டகால ஞாபகத்தில் சேமிக்கப்படும் வீதம் அதிகரிக்கிறது. பாடக் குறிப்புகளையும் சிக்னல் அட்டை, அங்கர் பால்மா அட்டை போன்றவற்றை படம்: 3இல் இருப்பது போன்று ஆரம்பத்தில் வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள். பாடநூல்களையும் பாடக் குறிப்புகளையும் படிக்கும்போது நீங்கள் பெற்ற சுருக்கக் குறிப்புகளை அவற்றில் எழுதிக் கொள்ளுங்கள். படிக்கும்போது இவ்வாறான Bookmarkகளைத் தயார் செய்து படிக்கும்போது நீங்கள் பெற்ற சுருக்கக்




குறிப்புகளை அவற்றில் எழுதிக் கொள்ளுங்கள். ஓய்வு நேரங்களிலும் பொழுது போக்குக்காகவும் கதைப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை வாசிக்கும்போதும் அடையாளமிடுவதற்காக இந்த Bookmarkகளைப் பயன்படுத்துங்கள்.

கதைப்புத்தகம் அல்லது சஞ்சிகையை ஓய்வு நேரம் கிடைக்கும்போது வாசிக்க ஆரம்பிக்க முன்னரும் வாசித்து முடித்த பின்னரும் இந்த Bookmarkஇல் எழுதியுள்ள விடயங்களை மீட்டுங்கள். படித்த விடயங்களை நீங்கள் மறக்காமல் இருக்க இது ஒரு பயன்மிக்க முறையாகும்.

(இன்ஷா அல்லாஹ், தொடரும்...)


**விற்பனை முகவர் தேவை**

உங்கள் அபிமான சஞ்சிகை அகரம் மாத இதழுக்கு நாடளாவிய ரீதியில் விற்பனை முகவர்கள் தேவை.

மாணாக்கருக்கு அறிவும் நல்லொழுக்கமும் கற்பிக்கும் அகரம் இதழின் விற்பனை முகவர் ஆகி ஈருலக நன்மைகளையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

தொடர்புகளுக்கு:

சகோதரர் அஷ்மல்கான்

0776 98 42 02 | 071 811 26 82



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

**10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது**

திருமதி என்.எஸ். நஸ்ரா நிஸாம்தீன்
B.A.(Hons) PGDE

## வாக்கிய ஒழுங்கு முறைகளும் அமைப்புகளும்

வாக்கியம் என்பது

பொருள் தரக்கூடிய வகையில் சொற்கள் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறைக்கு ஏற்ப ஒன்றுடன் ஒன்று அமைப்பு ரீதியாக இணைந்து ஒரு முற்றுப் பொருள் தருமாயின் அதனை வாக்கியம் என்பர்.

**வாக்கிய ஒழுங்கு முறைகள் (வாக்கிய உறுப்புக்கள்)**

ஒரு கருத்தை முழுமையாக வெளிப்படுத்துவதற்கு வாக்கிய உறுப்புகள் அவசியம்.

1- எழுவாய், பயனிலை

2- எழுவாய், செயற்படு பொருள், பயனிலை

3- எழுவாய் அடை, செயற்படுபொருள் அடை, பயனிலை அடை

என்றவாறு வகுத்து நோக்கப்படுகிறன.

(எ-டு)

i நான் → **எழுவாய்**; படித்தேன் → **பயனிலை**


ii நான் → **எழுவாய்**; பாடத்தைப் → **செயற்படு பொருள்**; படித்தேன் → **பயனிலை**

iii சிறுமியாகிய → **எழுவாய் அடை மொழி**; அவள்; சினிமா பாடல்களை → **செயப்படு பொருள் அடை**; சிறப்பாகப் பாடுவாள். → **பயனிலை அடை**


வாக்கிய உறுப்புக்களின் தன்மை

• **எழுவாய்- பயனிலை**

பயனிலையோடு திணை, பால், எண், இட உறவு கொண்டுள்ள பெயர்ச் சொற்களையே எழுவாய் என்கிறோம்.




(எ-டு)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எழுவாய் பெயர்ச்சொல்லாக வரும்.
- எழுவாய் உருபு ஏற்காது.
- திரிபடையாத பெயரே எழுவாயாகும்
- எழுவாயை **எழுவாய்த் தொடர்** என்றும் அழைக்கலாம்.
- எழுவாய் சில இடங்களில் **மறைந்து** வரும். அது 'தோன்றா எழுவாய்' என்றழைக்கப்படும்.
- தோன்றா எழுவாய் கொண்ட வாக்கியம், 'எழுவாய் தொக்கிய வாக்கியம்' எனவும் அழைக்கப்படும்.

(எ-டு)

**i** நான் பாடல் பாடினேன்.
↓
எழுவாய்

**ii** ↑ பரீட்சைக்குத் தோற்றினார்கள்.
**தோன்றா எழுவாய் → மாணவர்கள்**

பயனிலை

- வாக்கியத்தில் கருத்து முற்றுப் பெறும் இடம் பயனிலையாகும்.
  - பயனிலையை **'பயனிலைத் தொடர்'** என்றும் அழைக்கலாம்.
  - பயனிலை: - வினைச் சொற்களாக,
    - பெயர்ச் சொற்களாக அமையும்
  - வினைச்சொற்களாக அமைதலுக்கான எடுத்துக்காட்டுகள்
    - மாடு புல் | மேய்ந்தது. |
    - நான் | கூறினேன். |
  - பெயர்ச் சொற்களாக பயனிலை வருதலுக்கான எடுத்துக்காட்டுகள்
    - குமார் ஒரு | பாடகன். |
    - அவை | மான்கள். |
  - பெயர்ச் சொற்கள் பயனிலையாக வருதல் **பெயர் பயனிலை** என அழைக்கப்படும்.
  - பயனிலை தொக்கியும் வாக்கியமுள்ளதை அவதானிக்கிறோம். அத்தகைய வாக்கியம் **'பயனிலை தொக்கிய வாக்கியம்'** எனப்படும்

(எ-டு) அண்ணாவுக்கு கோபம்.

**இவ்வாக்கிய அமைப்பு,**

| அண்ணா கோபமாக <u>இருக்கிறார்.</u> |

என்று அமைய வேண்டுமென்பர் இலக்கணக்காரர்

செயற்படுபொருள்

- ஒரு வாக்கியத்தில் **வினையின்** பயனுக்கு உட்படும் பெயர்ச்சொற்கள் செயப்படுபொருள் எனப்படும்

[ ] [ ] [ ]
செயப்படுபொருள் ← வினையின் பயனுக்கு உட்படல் → பயனிலை

(எ-டு) ஹானிம் ஓவியம் வரைந்தாள்
ஓவியம் ↓ செயப்படுபொருள்
வரைந்தாள் ↓ (பயனிலை) வினை
வரைதல் என்ற வினைக்குட்பட்டது ஓவியம்

- செயப்படுபொருள் வாக்கிய நடுவில்தான் வரவேண்டுமென்பதில்லை. ஆனால், வினையின் பயனுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

(எ-டு) வீட்டை குமார் கட்டினான்
வீட்டை ↓ | செயப்படுபொருள் |
கட்டினான் ↓ பயனிலை (வினை)

கட்டினான்- வினை

வீடு- வினைக்குட்பட்ட பெயர்ச்சொல்

'செயப்படுபொருள்' தொடர்பான மேலதிக விடயங்களுடன் இன்ஷாஅல்லாஹ் மீண்டும் சந்திப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரைபுகள்

வரைபுகளில் நேர்கோட்டு வரைபுகள், வளைகோடுகள் (பரவளைவு) என இரு பகுதிகளாக நீங்கள் கற்றிருக்கிறீர்கள்.

நேர்கோடுகள்: நேர்கோட்டு வரைபுகளின் சமன்பாடுகளின் நியம வடிவம் $y = mx + c$ என குறிக்கப்படும். உ+ம்:

i. $y = 2x - 3$ ii. $y = x + 2$ iii. $y = \frac{1}{2}x + 1$ என்பவற்றை அவதானியுங்கள்.

| சமன்பாடு | $m$ | $c$ |
|---|---|---|
| $y = 2x - 3$ | 2 | $-3$ |
| $y = x + 2$ | 1 | 2 |
| $y = \frac{1}{2}x + 1$ | $\frac{1}{2}$ | 1 |

$m$ என்பதை படித்திறன் என்றும் $c$ என்பதை வெட்டுத்துண்டு என்றும் கூறுவோம்.

இந்நேர்கோடுகளை வரைவதற்கு குறைந்த பட்சம் மூன்று ஆட்கூறுகள் $(x, y)$ பெறப்பட்டு நேர்கோட்டு இப்புள்ளிகளை இணைப்பதன் மூலம் பெறப்படும்.

$y = 2x - 3$ எனும் சமன்பாட்டை யுடைய நேர்கோட்டைப் பெற **3** ஆட்கூறுகள் பெறப்பட்ட புள்ளிகளை குறிக்க பின்வருமாறு சிறு அட்டவணை ஒன்றைத் தயாரிக்கலாம். (விவேகமுள்ள மாணவர்கள் அட்டவனை இல்லாமலே ஆட்கூறுளைப் பெறுவர்) ஆகவே, புள்ளிகள் (0,−3) (1,−1) (2,1) புள்ளிகள் எனும் ஆட்கூறுகளாகப் பெறப்படும்.


| $x$ | 0 | 1 | 2 |
|---|---|---|---|
| $2x$ | 0 | 2 | 4 |
| $-3$ | $-3$ | $-3$ | $-3$ |
| $y$ | $-3$ | $-1$ | 1 |

$y = -2x + 3$ எனும் நோர்கோட்டின் ஆட்கூறுகளைப் பெற

| $x$ | 0 | 1 | 2 |
|---|---|---|---|
| $-2x$ | 0 | $-2$ | $-4$ |
| $+3$ | 3 | 3 | 3 |
| $y$ | 3 | 1 | $+1$ |

எனும் அட்டவணையைப் பயன்படுத்துவோம். ஆகவே, ஆட்கூறுகள் (0,3), (1,1) (2,−1) எனப் பெறப்படும். நேர்கோட்டு சமன்பாடுகளை வரைந்து அனுபவமுள்ள மாணவர்கள் ஒரு முக்கியமான விடயத்தை அவதானிப்பர். படித்திறன் மறையாக உள்ள நேர்கோடுகளும் படித்திறன் நேராக உள்ள நேர்கோடுகளும் சரிவுகளில் மாறுபடுகின்றன என்பதே அவ் அவதானிப்பு ஆகும்.

$y = 2x - 3$ இன் வரைபு




(0,−3)(1,−1)(2,1)


வலது

$y = -2x + 3$ இன் வரைபு

(0,3), (1,1) (2,−1) பின்வருமாறு அமையும்:





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




படித்திறன் நேராக உள்ள சமன்பாட்டின் நேர்கோடுகள் வலது பக்க கால்பகுதியினூடாக மேலே ஊடறுத்து செல்வதையும் படித்திறன் மறையாக உள்ளவை இடதுபக்க கால்பகுதியினூடாக ஊடறுத்து செல்வதையும் அவதானியுங்கள்.

ஆட்கூற்றுத்தளங்களை சரியாக வரையும் போதுதான் வரைபுகள் சரியாகப் பெறப்படும்.




**1** இலக்கமிடப்பட்ட கோட்டின் சமன்பாடு $y = 2$ ஆகும். இக்கோடானது $x$ அச்சுக்கு சமாந்தரமானது, இக்கோட்டிலுள்ள அடையாளமிடப்பட்ட புள்ளிகள். $(-3,2)$, $(-1,2)$, $(1,2)$, $(2,2)$, $(3,2)$ என்பவை ஆகும். இக்கோட்டின் $y$ ஆட்கூறு எப்பொழுதும் 2 என்றே குறிக்கப்படும்.

**2** எனும் இலக்கமிடப்பட்ட கோட்டை அவதானியுங்கள். இக்கோட்டின் சமன்பாடானது $x = 2$ ஆகும். இக்கோடானது $y$ அச்சுக்கு சமாந்தரமானது. $(2,-2)$, $(3,-1)$, $(2,0)$, $(2,1)$, $(2,2)$ எனும் புள்ளிகள் இக்கோட்டிலுள்ளன. $y = 2; x = 2$ எனும் கோடுகள் $(2,2)$ எனும் புள்ளியில் ஒன்றை ஒன்று வெட்டுகின்றன.

$x$ அச்சுக்கு மேலே உள்ள எல்லாப் புள்ளிகளினதும் $y$ இன் பெறுமானம் நேராக அதிகரிக்கும்.

$x$ அச்சுக்கு கீழே உள்ள எல்லாப் புள்ளிகளினதும் $y$ இன் பெறுமானம் மறையாக அதிகரிக்கும்

$y$ அச்சின் வலதுபக்கமுள்ள எல்லா $x$ இன் பெறுமானங்களும் நேராக அதிகரிக்கும்.

$y$ அச்சின் இடதுபக்கமுள்ள எல்லா $x$ இன் பெறுமானங்களும் மறையாக அதிகரிக்கும்.

மேற்கூறியவாறு அதிகரித்து செல்லும் வண்ணம் அலகுகள் குறிக்கப்பட்டிருப்பதை அவதானியுங்கள்.

மேலும் $x$ அச்சிலுள்ள $y$ இன் பெறுமானம் பூச்சியமாக உள்ளது.

ஆகவே, $x$ அச்சின் சமன்பாடு $y = 0$ ஆகும்.

அதேபோல் $y$ அச்சின் சமன்பாடு $x = 0$ ஆகும்.

மாணவர்களே, வருடா வருடம் தவறாமல் வினவப்படும் வினாக்களில் வரைபு பற்றிய வினாவும் முக்கியமானது. பெரும்பாலான மாணவர்கள் இவ்வினாவுக்கு விடை அளிக்கின்றனர். ஆனால், மிகக் குறைந்த எண்ணிக்கையினரே முழு வினாவுக்கும் சரியாக விடை அளிக்கின்றனர். இதன் காரணம், $(x, y)$ ஆட்கூறுகள் மாறி எழுதப்படுவதும் (உ+ம்:- $(2,3)$ என்பதை $(3,2)$ என தவறாக அச்சுக்களில் அலகுகள் குறிக்கப்படுவது) பொருத்தமான அச்சுக்கள் வரையப்படாததுமாகும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே, அது பற்றிய சில அடிப்படை விடயங்கள் தரப்பட்டுள்ளன. மேலும் பயிற்சிகளை ஆரம்பியுங்கள்.

| | | |
|---|---|---|
| i. $x = 2$ | ii. $x = -2$ | iii. $x = 0$ |
| iv. $y = 0$ | v. $y = 5$ | vi. $y = -3$ |

எனும் கோடுகளை சிறு ஆட்கூற்றுத்தளத்தில் வரைந்து பாருங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்று முன்னோடி

# இரசாயனவியலின் தந்தை ஜாபிர் இப்னு ஹய்யான்

**அறிவியல்** துறைக்கு பங்களித்த முஸ்லிம்கள் பலர். இவர்களில் பலர் அத்துறைகளின் முன்னோடிகளாக விளங்கினர். பல கண்டுபிடிப்புக்களை மனித நாகரிகத்திற்கு வழங்கி அறிவியல் யுகத்தைப் படைத்தனர் இந்த வகையில் ஜாபிர் இப்னு ஹய்யான் முக்கியமானவர்.

இவர் குராஸானிலுள்ள தூஸ் நகரில் ஹிஜ்ரி 104 (கி.பி. 722) பிறந்தார். இவரது முழுப்பெயர் அபூ மூஸா ஜாபிர் இப்னு ஹய்யான் அல்அஷ்தீ என்பதாகும். இவர் பனூ அல்அஷ்த் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பதனாலேயே அல்அஷ்தீ என அழைக்கப்படுகின்றார். இவர் ஐரோப்பியரால் 'ஜெபர்' என அழைக்கப்படுகிறார்.

பிறந்த சில நாட்களிலேயே தந்தையை இழந்த இவர், கூபா சென்று ஹர்பி அல் ஹிம்மாரீ என்பவரிடம் அல்குர்ஆனையும் ஆரம்ப கணிதத்தையும் கற்றார். பின்னர் இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்களிடம் மார்க்கக் கல்வியைக் கற்றார்.

மருந்து வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த இவர் பின்னர் இரசாயனவியலில் ஆர்வம் கொண்டு அத் துறையில் கற்று சிறப்புத் தேர்ச்சி எய்தினார். அது மாத்திரமன்றி அத்துறையில் தனிப்பெரும் புகழை அடைந்து இரசாயனவியலின் தந்தை எனப் போற்றப்பட்டார். இவரின் சிறப்புப் பற்றி ஐரோப்பிய அறிஞரான C. Singer என்பவர் Short History of Science எனும் நூலில் பின் வருமாறு கூறுகின்றார்:

"உண்மையில் அரேபிய இரசாயனத்தின் தந்தை ஜாபிர் ஆவார். இதன் மூலம் அவர் இக்கால இரசாயனவியலின் தந்தையாகவும் விளங்குகின்றார்."

அன்று இவர் அடைந்திருந்த புகழ் காரணமாக கலீபா ஹாரூனின் அரசவை மருத்துவராகப் பணிபுரிந்தார். மேலும் இவர் இரசாயனவியல் தொடர்பாக பல்வேறு கண்டுபிடிப்புக்களை உலகிற்கு வழங்கினார். அவற்றுள் துத்தத் தைலம் (Oil of Vitroil), வலிய நீர் (Aqua Fortis), நவச்சார உப்பு (Sal Ammoniac) எரிகாரம் போன்ற இரசாயன பதார்த்தங்கள் முக்கியமானவை. மேலும் உலோகங்களை சுத்திகரித்தல், உருக்குத் தயாரித்தல், துணிகளுக்கும் தோல்களுக்கும் சாயம் இடுதல், துணிகளில் நீர் படியாமல் இருக்கவும் இரும்பைப் பாதுகாக்கவும் மெருகிடுதல், மங்கனீ ரொட்சைட்டைப் பயன்படுத்தி நிறக் கண்ணாடிகளைச் செய்தல் போன்றவற்றையும் அறிந்திருந்தார்.

இரசாயனவியலின் இரு பிரதான செய்கைகளான நீற்றல் (Calcination), தாழ்த்தல் (Reduction) ஆகியவற்றைப் பற்றி விஞ்ஞான ரீதியான விவரணத்தை தந்த பெருமை இவரையே சாரும் என வரலாற்றாசிரியர் பிலிப் கே. ஹிட்டி குறிப்பிடுகின்றார்.

இரசாயனவியல் தொடர்பாக இவர் பல நூல்களை எழுதினார். கிதாபுர் ரஹ்மத், கிதாபுத் தஜ்மீஃ, கிதாபுஷ் ஷிஃப்கபுஷ் ஷர்கி (கீழைத்தேய இரசம் பற்றிய நூல்) கிதாபுல் மஷான், கிதாபுஸ் ஸப்ஈன், கிதாப் ஸுன்தூகுல் ஹிக்மா என்பன குறிப்பிடத்தக்கவை.

மேலும் இவரது நூல்கள் இலத்தீன் மொழிக்கு பெயர்க்கப்பட்டன. இதில் முதலாவது இரசவாத இயல்பு நூல் (Book of the Composition of Alchemy) என்பதாகும். இவ்வாறு இரசாயனவியல் துறைக்கு அரும் பெரும் சேவையாற்றிய இவர் கூபாவில் ஹிஜ்ரி 200 (கி.பி. 815) இல் மரணமானார்.

இவரைப் பற்றி ரொம் லண்டோ (Rom Londau) இவ்வாறு குறிப்பிடுகிறார்:

"முஸ்லிம் இரசாயனத் துறையில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த பெயர் பெற்றவர் இப்னு ஹய்யான் ஆவார்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சரம்



## ரமழானே வந்துவிடு

புண்ணியம் பூத்துக்
குலுங்கும்
கண்ணிய மாதமாம்
ரமழானே வந்து விடு

எம் உள்ளங்களின்
பாவக் கறையகற்ற
நோன்பளித்து
மாண்பளிக்கும் ரமழானே
வந்து விடு

பொய் புறம் கோள்
தவிர்த்து
பொறுமையுடனிருக்கும்
நோன்பாளிக்காய்
ரையான் எனும்
சுவனமதைப் பரிசளிக்கும்
ரமழானே வந்து விடு

நரகின் கதவுகள்
மூடப்பட்டு
சுவனம்
அலங்கரிக்கப்படும்
சுந்தர ரமழானே
வந்து விடு

நேர்வழியில் வாழ்ந்திடவே
வல்லவனாம் அல்லாஹ்
எமக்களித்த
அருள் மறையாம்
அல் குர்ஆன் அருளப்
பெற்ற
அருள் நிறைந்த ரமழானே
வந்து விடு

எம்.ஏ. றிஸ்னா அபூபக்கர்
அட்டுலுகம, பண்டாரகம

## நேசம்

அன்பின் அர்த்தத்தை
ஆழமாய்த் தீட்டிய
அன்புப் பெற்றோரில்
அளவிலா நேசம்

'அகரம்' ஊட்டி
அறிவு தந்த
ஆசான்கள் மீது
அரியதொரு நேசம்

சாதனைகள்
சாத்தியம் எய்த
சந்தர்ப்பம் செய்த
பள்ளிக்கூடத்துடன்
பெரியதொரு நேசம்

தோளோடு தோள் நின்று
துயர் துடைத்த
தோழர்களோடு
தெவிட்டாத நேசம்



நன்மைகள் செப்பி
நன்னெறி புகட்டிய
நன்னூல்கள் மீது
நல்லதோர் நேசம்

பகல்கள் இருண்ட
பயங்கர நிலையில்
பாதை காட்டிய
கல்வித் தாயில்
கொள்ளை நேசம்

யதார்த்தம் சுமக்கும்
எனது நாட்குறிப்பில்
இவ்வாறான நேசங்கள்
இன்னும் நீளமாய்...

அய்மா நிஃமத்துல்லாஹ்
மருதமுனை

## அன்றும் இன்றும்

அன்று குர்ஆனை
சுமந்து வந்தவர்கள்
இன்று இறுவட்டுக்களை
சுமந்து வருகிறார்கள்!

அன்று குர்ஆனை
ஓதியவர்கள்
இன்று சினிமாப் பாடல்களை
இரசிக்கின்றார்கள்!

அன்று மார்க்கத்திற்காக
அழுதவர்கள் -இன்று
நாடகங்களுக்கும்
படங்களுக்கும்
கண்ணீர் வடிக்கிறார்கள்!

அன்று சலாம்
சொன்னவர்கள்
இன்று என்னென்னவோ
சொல்கிறார்கள்!

என்.எல். நுஸ்ஹா
நம்முவாவ, நிகவரெட்டிய




## பாடசாலை

கலை, கல்வி கற்றிடவே
கட்டியெழுப்பிய பாடசாலை

பண்பை மனதில் பெற்றிடவே
பண்பாட்டு இடமாம் பாடசாலை

நல்லொழுக்கமாய் நடந்திடவே
நன்னெறி ஊட்டும் பாடசாலை

பாராட்டுப் பலதும் பெற்றிடவே
படிக்கல்லாய் அமைந்த
பாடசாலை

ஐ.எஸ்.எப் ஐனியா
தரம்-06, மட்/ நூராணியா
வித்தியாலயம், காத்தான்குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் I**

**நேரம் 45 நிமிடங்கள்**

தயாரிப்பு: எம்.எம். முபாரக், எஸ்.ஐ.எல். முஸம்மில்

**பின்வரும் தரவுகளை வைத்து சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. கார்மேகம் கண்டு நான் ஆடுவேன். என்னைக் கண்டால் பாம்பின் படம் நடுங்கும்.
   i. மயில் ii. கீரி iii. குரங்கு

2. நீரை விட்டால் ஏது கதி? நான் ருசியான கறி.
   i. இறைச்சி ii தவளை iii. மீன்

3. நித்திரையில் வரும்; விழித்து விட்டால் ஓடிவிடும்.
   i. பேய் ii. கனவு iii. இருட்டு


4. இரையை வலையில் வீழ்த்துவேன். எட்டுக் கால்களுடன் வாழ்ந்திடுவேன்.
   i. நண்டு ii. எறும்பு iii. சிலந்தி

5. பொதி சுமப்பேன். கற்பூர வாசனை தெரியாதவன் என என்னை இகழ்வர்.
   i. மாடு ii. மடையன் iii. கழுதை

**மூன்று படங்கள் ஏதோ ஒருவகையில் ஒரே கருத்தைத் தரும். ஒன்று மட்டும் வித்தியாசமானது. அதன் இலக்கத்தை புள்ளிக் கோட்டில் எழுதுக.**



6. i. ii. iii. iv. (.....)



7. i. ii. iii. iv. (.....)

**சிங்கள வசனங்களுக்கான கருத்தை எழுதுக.**

8. துஷாரகே அய்யா ............................

9. சமாவென்ன ............................

**பழமொழிக்கு பொருத்தமான கருத்தை தெரிந்து கோடிடுக.**

10. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
    i. முன்மாதிரி ii. நற்பண்பு
    iiii. குறுக்கு வழி

11. எடுப்பது பிச்சை; ஏறுவது பல்லக்கு.
    i. பொறாமை ii. வீண் பெருமை
    iii. நன்றி மறத்தல்

**பின்வரும் ஆங்கில சொற்களில் சரியான சொல்லின் கீழ் கோடிடுக.**

12. மருந்தகம் என்பதற்கான ஆங்கிலச் சொல்
    i. Pharmacy ii. Phamecy iii. Pamacy

13. வெண்ணெய் என்பதற்கானஆங்கில சொல்
    i. Buttaer ii. Butter iii. Bater

**சரியான விடையை தெரிந்து எழுதுக.**

14. இளனீர், இலநீர், இளநீர் ..............

15. மரவல்லி, மரவள்ளி, மரவெள்ளி...............

16. மனி மண்டபம், மணி மண்டபம், மணி மன்டபம் ..............

**கழிக்குக.**


17.

| kg | g |
|---|---|
| 10 | 50 |
| 7 | 720 |
| | |

18.

| l | ml |
|---|---|
| 12 | 90 |
| 11 | 650 |
| | |

19. சுற்றளவைக் காண்க.




**கீழே தரப்பட்டுள்ள உருவங்களின் பெறுமானங்களை அவதானித்து தரப்பட்ட வினாக்களுக்கு பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

○ - □ = 3
□ + △ = 10
△ x △ = 36



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ○ இன் பெறுமானம்

i. 7 ii. 3 iii. 5

21. □ இன் பெறுமானம்

i. 4 ii. 5 iii. 3

22. நீரில் மிக விரைவாக கரையக் கூடிய பொருள்.

i. குளுக்கோஸ் ii. சீனி iii. மா

23. இரவில் ஒட்சிசனை வெளியிடும் தாவரம் எது?

i. அரச மரம் ii. வேம்பு iii. பலா

24. புல்லாங்குழலில் உள்ள மொத்தமான துளைகள்.

i. 8 ii. 7 iii. 6

25. வீணையில் உள்ள தந்திகளின் எண்ணிக்கை

i. 8 ii. 7 iii. 4

பின்வரும் பாடலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அம்மா நான் விளையாடப் போறேன்- கையில்
அன்புடன் பட்சணம் தந்தனுப் பென்னை
சும்மா நான் உட்கார மாட்டேன் நல்ல
தோழர் அழைக்கிறார் நாழிகை ஆச்சு
பூப்பறித்தாடுவோம் பூரதம் கட்டி
வேப்பமரத்தடி மண்ணில்- சிறு
வீடுகள் கட்டி விருந்துகள் செய்வோம்
பாட்டுக்கச்சேரிகள் செய்வோம்- நான்
பாடுவேன் மத்தளம் போடுவான்- கிட்டு
கேட்டுச் சபாஷ் எனச் சொல்வார்- பின்பு
கிண்கிணி கட்டி நடனங்கள் செய்வோம்

26. மத்தளம் போடுபவன் யார்? ....................

27. போறேன் என்பதன் எழுத்து வடிவம் ........

28. பொழுது என்பதன் ஒத்த பதத்தைக் குறிக்க பாடலில் இடம்பெற்ற சொல் ..................

29. "நல்ல தோழர் அழைக்கிறார் நாழிகை ஆச்சு" என்பதில் பெயர்அடைமொழி ........

30. அன்புடன் என்பதன் எதிர்க் கருத்துச் சொல் ....................

31. மத்தளம் என்பதன் பன்மைச் சொல் ..........

சரியான விடையின் கீழ் கோடிடுக.

32. எதிர்காலத்தைக் குறிக்கும் சொல் ஒன்று

i. வாழ்ந்தோம் ii. சிந்திப்போம் iii. வருகிறீர்

33. தொழிற் பெயர் ஒன்று


i. நாடுதல் ii வேண்டினேன் iii. நடந்தாய்

34. கடகட என்பது

i. இணைமொழி ii. இரட்டைக் கிளவி iii. அடுக்குமொழி


ஆரம்பத்தில் உள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவு செய்க.

35.




i. ii. iii.

36.



i. ii. iii.

37. ஒரே கூட்டத்தைச் சேர்ந்த பொருட்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.




i. ii. iii.

ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாத சொற்கள் இடம்பெறும் அடைப்பைத் தெரிவு செய்க.

| | | | |
|---|---|---|---|
| 38. | மீனவர் படகு கடல் | தென்னை, கட்டில், கதிரை | மருத்துவர், வைத்தியசாலை, விவசாயி |
| 39. | கடல் குளம் ஏரி | மேசை கட்டில் கதிரை | கலப்பை மண்வெட்டி கத்தரி |

40. நிறந்தீட்டிய பகுதியை பின்னத்தில் எழுதினால் வருவது.



i. $\frac{1}{4}$ ii. $\frac{1}{2}$ iii. $\frac{1}{3}$



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

200 மீ. ஓட்டப் போட்டி ஒன்றில் ஐந்து பேர் கலந்து கொண்டு அவர்கள் போட்டியை முடித்துக் கொண்ட நேரம் பின்வருமாறு:

| அமிர் | அமலன் | அக்பர் | கமலன் | விமலன் |
|---|---|---|---|---|
| 16.55 செக்கன் | 19.00 செக்கன் | 16.51 செக்கன் | 16.88 செக்கன் | 15.91 செக்கன் |

**41.** இவ் ஓட்டப்போட்டியில் 1,2,3ம் இடங்களைப் பெற்றவர்களுடைய பெயர்கள் சரியான ஒழுங்கின்படி எழுதினால் வருவது.

i. அமலன், கமலன், அமிர்

ii. அக்பர், அமிர், அமலன்

iii. விமலன், அக்பர், அமிர்

**42.** கருப்பனின் பண்ணையில் கோழிகளும் ஆடுகளுமாக 12 பிராணிகள் உள்ளன. அவற்றின் கால்களின் எண்ணிக்கை 40 ஆகும். அங்குள்ள ஆடுகள் எத்தனை?

i. 10 ii. 8 iii. 4

**43.** நீட்டல் அளவைகளை ஒழுங்குபடுத்தி எழுதினால் பெறக்கூடிய ஒழுங்குமுறையை தெரிவு செய்க.


i. m, mm, cm, km ii. mm, cm, m, km

iii. km, m, cm, mm

**44.** வாகனம் ஒன்று ஒரு லீற்றர் பெற்றோலில் 10 கி.மீ. செல்கிறது. 20 லீ. பெற்றோலை நிரப்பிக் கொண்டு பயணத்தை ஆரம்பித்த வாகனம் 70 கி.மீ. சென்றது. எஞ்சி இருக்கும் பெற்றோலில் வாகனம் எத்தனை கி.மீ. செல்லும்.


i. 130 km ii. 270 km iii. 190 km

**45.** கோலத்திற்கு ஏற்ப அடுத்ததாக இடப்பட வேண்டிய உருவைத் தெரிவு செய்க.



i. ii. iii.

**46.** கோலத்திற்கு ஏற்ப வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.




i. 4 ii. 3 iii. 8

**47.** ரூபா. 7541.83 ஐக் குறியீடுகளில் R.CFAD.BO எனக் காட்டப்பட்டுள்ளது எனின், 7853.44 ஐ எவ்வாறு காட்டலாம்?

i. R.CABO.FF ii. R.CFAD.OB

iii. R.CBFO.AA

**48.** சிறுவர்களுக்கு காணப்படும் பற்களின் எண்ணிக்கை.

i. 32 ii. 20 iii. 16

**49.** மழை வருவதை முன் கூட்டியே அறியும் பறவை.

i. காகம் ii. புறா iii. மயில்

**50.** மஞ்சள் நிறக் கொடி குறிப்பது.

i. தொற்று நோய் ii. துக்க தினம்

iii. மரண வீடு

## வினாப்பத்திரம் - I விடைகள்

1. i
2. iii
3. ii
4. iii
5. iii
6. iii
7. iv
8. துஷார உடைய அண்ணன்
9. மன்னிக்கவும்
10. i
11. ii
12. i
13. ii
14. இளநீர்
15. மரவள்ளி
16. மணி மண்டபம்
17. 2 kg 720 g
18. 440 ml
19. 28 cm
20. i
21. i
22. i
23. i
24. i
25. ii
26. கிட்டு
27. போகிறேன்
28. நாழிகை
29. நல்ல
30. வன்புடன்
31. மத்தளங்கள்
32. சிந்திப்போம்
33. நாடுதல்
34. இரட்டைக் கிளவி
35. iii
36. ii
37. i
38. iii
39. iii
40. iii
41. iii
42. ii
43. ii
44. i
45. i
46. iii
47. iii
48. ii
49. iii
50. i


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்

**வினாப்பத்திரம் II**

**நேரம் 1 மணி 15 நிமிடம்**

ஆசிரியர்கள்: எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

1. மின்குமிழை ஒளிரச் செய்வதற்காக A,B என்னும் இரு ஆணிகளை தொடுப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டியது.




i. வாணீசுத் தாள் ii. திமைத் தாள்
iii. பலகைத் துண்டு iv. குண்டூசி

2. சதுரமொன்றின் பரப்பளவு 4 சதுர சென்றி மீற்றர் ஆகும். அச் சதுரத்தின் சுற்றளவு யாது?

i. 8 cm ii. 1 cm iii. 4 cm iv. 16 cm

3. வெற்றிடத்திற்கு வர வேண்டிய எண்ணை எழுதுக.

| | | |
|---|---|---|
| 6 | 8 | 10 |
| 3 | 4 | 5 |
| 9 | 16 | - |

i. 25 ii. 32 iii. 20 iv. 10

4. ஒரு எண்ணின் 6 மடங்கிலிருந்து 8ஐக் கழிக்க வருவது 40 ஆகும். அவ் எண்ணின் 7 மடங்கு எத்தனை?

i. 48 ii. 56 iii. 64 iv. 42

தரப்பட்ட கணித செய்கையை அவதானித்து பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.

A+B+D=45  A+B+B=50  B+D=35

5. A இன் பெறுமதி யாது?

i. 20 ii. 10 iii. 30

6. D இன் பெறுமதி யாது?

i. 25 ii. 15 iii. 20

7. எமது நாட்டிற்கு உரித்தான பிராணிகள் யாவை?

i. கானாங்கோழி, கீரிப்பிள்ளை, நீர்க்காகம்
ii. கீரிப்பிள்ளை, கோழி, கிளி
iii. நீர்ப்பாம்பு, மரத்தவளை, மயில்
iv. மயில், குயில் கரடி, காகம்

8. தாவரத்தின் நார்ப்பகுதியை பயன்படுத்தி கூடு கட்டுவது.

i. புறா ii. கிளி
iii. தூக்கணாங் குருவி iv. காகம்

9. சித்திரை மாதத்தில் பூக்கும் தாவரம்

i. வேம்பு ii. வெசாக்
iii. இலுப்பை iv. குறிஞ்சி

10. வித்திலிருந்து நாற்றுக்கள் வெளிவருவதை எவ்வாறு அழைப்பர்?

i. முளைவேர் ii. முளைத்தண்டு
iii. ஆணிவேர் iv. முளைத்தல்

11. மரவள்ளிக் கிழங்கில் அதிக அளவில் உள்ள போசணைப் பொருள்.

i. விற்றமின் ii. புரதம்
iii. மாப்பொருள் iv. இலிப்பிட்டு

12. மின்சார வேலைக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மாத்திரம் இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

i. கையுறை, குறடு, மின்சோதிப்பான், துருத்தி
ii. குறடு, மின்சோதிப்பான், திருகாணி செலுத்தி, கையுறை
iii. மின்சோதிப்பான், குறடு, கையுறை, சீவுளி
iv. திருகோணி செலுத்தி, குறடு, நீர்மட்டம், தூக்குக் குண்டு

13. தண்டு வேர்கள் நடுவதன் மூலம் கன்றுகள் பெறப்படத்தக்க தாவரம்.

i. மா ii. தேக்கு
iii. பப்பாசி iv. முருங்கை

14. யானைக்கால் நோய் பரவுவது.

i. ஈயின் மூலம் ii. கோழியின் மூலம்
iii. நுளம்பின் மூலம்
iv. யானையின் மலம் மூலம்

15. டெங்கு நுளம்பு எவ்வாறான இடங்களில் முட்டையிட்டுப் பரவுகின்றது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

i. அசுத்தமான நீரில்

ii. அசுத்தமான நீர் தேங்கி நிற்கும் இடத்தில்

iii. சுத்தமான நீரின் மேல்

iv. சுத்தமான நீரின் அடியில்

16. பின்வரும் கூற்றுக்களிடையே வளியைப் பற்றிய பிழையான கூற்றைத் தெரிவு செய்க.

i. வளி எல்லாத் திசைகளிலும் மாறி மாறி வீசும்.

ii. உயிர் வாழ்வதற்கு வளி அத்தியவசிய மாகும்.

iii. கடலில் பாய்மரக் கப்பல் காற்றின் மூலம் செல்லும்.

17. தேசப்படத்தில் மலைகளைக் காட்டும் நியம நேரம்.

i. சிவப்பு ii. கபிலம்

iii. நீலம் iv. கறுப்பு

18. திஸ்ஸவாவியை கட்டுவித்த மன்னன்.

i. பண்டுகாபயன் ii. தேவநம்பிய தீஸன்

iii. தாது சேனன் iv. மகாசேனன்

19. இலங்கை அரசாங்க இலச்சினையில் காணப்படாதது எது?

i. சூரியன், சந்திரன், நெற்கதிர்

ii. மலர் இதழ், சூரியன், நிறைகலசம்

iii. நிறைகலசம், தர்மச் சக்கரம், சிங்கம்

iv. தர்மச் சக்கரம், வாள் ஏந்திய சிங்கம், மலர் இதழ்

**பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

இலங்கை இயற்கை வளம் மிக்க ஒரு நாடு. எழில் கொஞ்சும் மலை நாடு, பரந்த வயல் வெளிகள், பசுமையான புற்றரைகள், சலசல என ஓடும் அருவிகள் போன்றன மென்மேலும் இதற்கு அழகு சேர்க்கின்றன. நான்கு பக்கமும் நீரால் சூழப் பட்ட இலங்கை, பல காடுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இக்காடுகளில் சிங்கராஜ வனம் பெயர் பெற்றது. இதே போன்று மலைகள் அழகிய குன்றுகளையும் இங்கே காணலாம். இதனால் உல்லாசப் பிரயாணிகளின் படையெடுப் பிற்கும் குறைவில்லை.

சுதந்திரமாக காடுகளிலே சுற்றித் திரியும் மிருகங்கள், அதே போன்று சுதந்திரமாக காடுகளிலே பறந்துத் திரியும் பறவைகள் போன்றவற்றையும் நேரடியாகக் கண்டு களிப்பதில் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர். வெளிநாடுகளில் இருந்து வரும் பலர் இவற்றை புகைப்படங்களாகவும் இறுவட்டுக்களிலும் எடுத்துச் செல்கின்றனர்.

ஒரு சாரார் இவற்றையெல்லாம் இரசித்தாலும் இன்னொரு சாரார் மிருகங்களையும் பறவைகளையும் வேட்டையாடுவதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கின்றனர். இதற்கு அரசு பல தண்டனைகளை விதித்திருந்தாலும் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு தத்தமது காரியங்களை கச்சிதமாக முடித்து விடுகின்றனர். அதுமட்டுமல்லாது இயற்கை வளமான காடுகளையும் அழித்து வருகின்றனர்.

20. இலங்கை இயற்கை வளம் மிக்க நாடு என்பதில் எழுவாய் எது?

21. இயற்கை என்பதன் எதிர்க்கருத்து யாது?

22. முதல் பந்தியில் காணப்படும் பெயரெச்சம் எது?

23. சிங்கராஜ வனம் அமைந்துள்ள மாகாணம் எது?

24. பறவைகள் சுதந்திரமாகப் பறந்து திரியும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?

25. இலங்கையில் காணப்படும் பெரிய மலை யாது?

26. இலங்கை ஏன் தீவு என அழைக்கப்படுகிறது?

27. கண்ணில் மண்ணைத் தூவுதல் என்பதனால் கருதப்படுவது?

**சொற்களின் ஒழுங்குகளை இனங்கண்டு விடையை எழுதுக.**

28. மிளகு, குரும்பை, பைரவி ...............

29. முயற்சி, சிவப்பு, புதுமை ...............

**தரவுகளை வைத்து விடையைக் காண்க.**

30. கசப்பில் உண்டு இனிப்பில் இல்லை.
அம்மியில் உண்டு குளவியில் இல்லை.
படகில் உண்டு அடுப்பில் இல்லை.
பல்லியில் உண்டு சுவரில் இல்லை.
.................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. கடலில் இருப்பேன் ஆனால் உயிர் இல்லை.

பாய் வைத்திருப்பேன் படுக்க இடந்தர மாட்டேன்.

காற்று வீசும் திசையை நோக்கி நகர்வேன்.

..........................

சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

32. மாலு அல்லன்ன ...................

33. துவ அக்குறு லியன்ன ................

சரியான விடைக்குக் கோடிடுக.

34. இலவு காத்த கிளி போல என்பது

(இணைமொழி, உவமைத் தொடர், மரபுத் தொடர்)

35. சாக்குப் போக்கு என்பது

(இணைமொழி, உவமைத் தொடர், இரட்டைக் கிளவி)

36. அலப்பும் என்பது

(இளமை மரபு, ஒலி மரபு, கன்றுகளின் மரபு)

ஆங்கில வாக்கியங்களுக்கான கருத்தை எழுதுக.

37. I have tow pens .........................

38. You run .........................

39. நாதன், நானும் சுற்றுலா செல்வேன் என ஒற்றைக்காலில் நின்றான். இதில் ஒற்றைக் காலில் நின்றான் என்பது.

(சாதனை படைத்தல், விடாப்பிடி, கால் உடைதல்)

40. எதிர்கால நிகழ்வுகளை அறியும் ஆற்றல் படைத்தவனை மக்கள் கண்டு வியந்தனர். இதில் எதிர்கால நிகழ்வுகளை அறியும் ஆற்றல் படைத்தவன் என்பது.


(தபுதாரன், தசாவதானி, தீர்க்கதரிசி)

750 இனிப்புக்களில் 30ஐ மீதப்படுத்தி வைத்து மற்றைய எல்லாம் ஒரு பைக்கற்றில் 8 வீதம் இருக்குமாறு சிறிய பைக்கற்றுகளாகப் பொதி செய்யப்பட்டன.

41. சிறிய பைக்கற்றுக்களில் பொதி செய்யப் பட்ட இனிப்புக்களின் மொத்த எண்ணிக்கை. ..................

42. அத்தகைய எத்தனை சிறிய இனிப்புப் பைக் கற்றுகளை தயார் செய்யலாம்? ................

43. உருவில் காணப்படும் தகவல்களுக்கு ஏற்ப வெற்றிடங்களை நிரப்புக.




i. 1kg 250g ii. 2kg iii. ......kg.........g


44. 2500 $ml$ கொள்ளளவுள்ள ஒரு பாத்திரத்தில் 2 $l$ 100 $ml$ நீர் உள்ளது. அப்பாத்திரத்தில் மேலும் 500 $ml$ நீரைக் கவனமாக ஊற்றும் போது பாத்திரத்தில் இருந்து வெளியேறும் நீரின் கனவளவு யாது? ................ $ml$

45. பிற்பகல் 1.45 மணிக்கு புத்தளத்தில் இருந்து புறப்பட்ட பஸ் வண்டி பிற்பகல் 5.20 மணிக்கு கொழும்பை வந்தடைய வேண்டும். ஆனால், பஸ்வண்டி 20 நிமிடங்கள் தாமதமாகி கொழும்பை வந்தடைந்தது. பஸ் வந்தடைந்த நேரத்தை எழுதுக. .....................

46. அந்த நேரத்தை நியம நேர கடிகாரத்திற்கு ஏற்ப எழுதுக. ................

48 $\frac{1}{4}+\frac{2}{5}=$ ..........

49.



இவ்வுருவில் முக எண்ணிக்கை ...............

50. இவ்வுருவில் விளிம்பு எண்ணிக்கை .............

51.

| தி | செ | பு | வி | வெ | ச | ஞா |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

● போயா நாள்

மே மாத நாட்காட்டியின் பிரகாரம் எத்தனை நாட்கள் பாடசாலை நடைபெற்று இருக்கும். ...........

52. பாடசாலை விடுமுறை நாட்கள் எத்தனை? .........................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.

53. மான் கூட்டம் துள்ளி ஓடின. ( )

54. அவன் நல்லவன் அல்லன். ( )

55. மன்னர்கள் குளத்தை கட்டுவித்தமைக்கான காரணம் அவர்கள் குளிப்பதற்கு ( )

56. 'ெ' இது ஒற்றைக் கொம்பு எனப்படும். ( )

57. கையடக்கத் தொலைபேசி மூலம் நன்மை மட்டும் ஏற்படாது. ( )

58. நீர் மூன்று நிலைகளைக் கொண்டது. ( )

## வினாப்பத்திரம் II விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | iv | 28. | ஏமாற்றுதல் |
| 2. | i | 29. | 'வி' என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் பொருத்தமான சொல் |
| 3. | i | 30. | 'மை'யில் ஆரம்பிப்பது |
| 4. | iv | 31. | சாம்பல் |
| 5. | i | 32. | பாய்மரக் கப்பல் |
| 6. | i | 33. | மீன் பிடியுங்கள் |
| 7. | ii | 34. | மகள் எழுத்து எழுதுங்கள் |
| 8. | i | 35. | உவமைத் தொடர் |
| 9. | iii | 36. | இணைமொழி |
| 10. | i | 37. | ஒலி மரபு |
| 11. | iv | 38. | என்னிடம் இரு பேனாக்கள் உள்ளன. |
| 12. | iii | 39. | நீ ஓடு |
| 13. | ii | 40. | விடாப்பிடி |
| 14. | ii | 41. | தீர்க்கதரிசி |
| 15. | iii | 42. | 720 |
| 16. | iii | 43. | 90 |
| 17. | iv | 44. | 750ஆ |
| 18. | ii | 45. | 100 ml |
| 19. | ii | 46. | பிற்பகல் 5.40 மணி |
| 20. | iii | 47. | 17:40 மணி |
| 21. | இலங்கை | 48. | $\frac{13}{20}$ |
| 22. | செயற்கை | 49. | 4 |
| 23. | பரந்த | 50. | 6 |
| 24. | ஊவா | 51. | 20 நாட்கள் |
| 25. | பறவைகள் சரணாலயம் | 52. | 11 நாட்கள் |
| 26. | பீதுருதாலகல | | |
| 27. | நான்கு பக்கமும் நீரால் சூழப்பட்டதால் | | |

அன்று ஞாயிற்றுக்கிழமை. மூன்று வாரங்களுக்குப் பின் வீட்டுத் தோட்டத்திற்குள் சென்றேன். அங்கே ... என்ற தலையங்கத்தில் ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது ஐந்து சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

1. ..........................................

2. ..........................................

3. ..........................................

4. ..........................................

5. ..........................................

6. ..........................................

நபி (ஸல்லல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:

"சுவனத்தில் ஒரு நுழைவாயில் உண்டு. அது ரய்யான் என அழைக்கப்படும். மறுமை நாளில் அதனூடாக நோன்பாளிகள் நுழைந்து செல்வார்கள். அவர்களுடன் வேறு யாரும் நுழைந்து செல்ல மாட்டார்கள். நோன்பாளிகள் எங்கே? என்று கேட்கப்படும். உடனே, அவர்கள் எழுவார்கள். அவர்களைத் தவிர வேறு எவரும் அதன் வழியாக நுழைய மாட்டார்கள். அவர்கள் நுழைந்ததும் அவ்வாசல் அடைக்கப்பட்டு விடும். அதன் வழியாக வேறு எவரும் நுழைய மாட்டார்கள்." (அல்புகாரி)

நபி (ஸல்லல்லலாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறினார்கள்:
"முஹம்மதின் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மேல் ஆணையாக! நோன்பாளியின் வாயிலிருந்து வீசும் வாடை அல்லாஹ்விடம் கஸ்தூரியின் வாடையை விட விருப்பமானதாகும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ரமழான் மாதத்தில் எமது முன்னோர்...

முஹம்மத் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அதிகம் அல்குர்ஆன் ஓதக் கூடியவர்களாக இருந்தார்கள்.

கதாதா (ரழியல்லாஹு அன்ஹு ) அவர்கள் வழமையாக ஏழு நாட்களில் குர்ஆனை ஓதி முடிப்பார்கள். ரமழான் வந்துவிட்டால் மூன்று இரவுகளில் ஓதி முடிப்பார்களாம்.

இமாம் ஸுஹ்ரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கூறுவதாவது;

"ரமழான் மாதம் குர்ஆன் ஓதுவதற்கும் உணவளிப்பதற்கும் உரிய மாதமாகும்."

அனஸ் இப்னு மாலிக் (ரழியல்லாஹு அன்ஹு) ரமழான் வந்துவிட்டால் ஹதீஸ் வகுப்புக்களிலிருந்தும் அறிவு பெறும் சபைகளிலிருந்தும் அல்குர்ஆன் ஓதுவதின் பால் விரைந்து செல்வார்கள்.

இமாம் ஸுப்யான் அஸ்ஸவ்ரி (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ரமழான் வந்துவிட்டால் ஏனைய அனைத்து இபாதத்துகளையும் குறைத்து விட்டு அல்குர்ஆனை ஓதுவதிலே நேரம் கடத்துவார்கள்.

நாம் சென்ற ரமழானில் எத்தனை தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடித்தோம்?

இந்த ரமழானில் எத்தனை தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடிக்க நிய்யத் வைத்துள்ளோம்?

அதன் கருத்துக்களை வாசிக்க நாம் எவ்வளவு தூரம் முயற்சி செய்தோம்? அல்குர்ஆன் கூறும் விடயங்களை விளங்க நாம் எவ்வாறான முயற்சிகளில் ஈடுபட்டோம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Monthly English Magazine

# The Trend

Gateway to Alternative Views




## Subscriptions Details:

**Local:**
Single Copy: LKR 100
Annual Subscription: LKR 1400
6 Months Subscription: LKR 700

**International:**
India, Pakistan, Maldives, Singapore: LKR 2000.00
Middle East: LKR 2,200.00
England, New Zealand, Australia, Malaysia, Japan, Korea: LKR 2,400.00
United States: LKR 2,700.00

## Contact:

**H.M. Hilal**
(+94 777 849 169)

**S.A. Farraj**
(+94 775777177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org